உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-5 இதழ்-139

விருப்ப சந்தா இதழ்

ஜூன் 1-15, 2022



# குதிரை முகத்துடன் காட்சிதரும் நந்தி

# அக்னி நட்சத்திர நாளில் இறைவனை குளிர்விக்க முன்னோர் கடைபிடித்த நடைமுறை



அக்னி நக்ஷத்திர தோஷ காலக்கட்டத்தில் பழம்பெருமை வாய்ந்த சிவாலயங்களில், மூலவரை உஷ்ண உபாதையிலிருந்து காக்க, உச்சிக்கால பூஜைகளுக்கு முன்பு சந்நிதியை சுற்றியுள்ள நீராழி மண்டபத்தில் நீர் நிரப்பிய பின்பே, உச்சிக்கால பூஜை தொடங்கி பின்னர் நடையடைக்கும் வழக்கம் இருந்தது,

தற்காலத்தில் இந்த நிலை வெகுவாக சுருங்கிக் கொண்டு விட்டது, சில ஆலயங்களில் சீதள கும்பம், சில ஆலயங்களில் இளநீர் அபிஷேகம் என இந்த தோஷ காலத்தில் நடைப்பெறும்.

இறை அனைத்தும் கருவறையில் உள்ள இறைவனை குளிர்விக்க கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகளாகும்.

ஆனால் தற்போது பெரிய பெரிய கோவில்களில் கூட இந்த முறை கடைபிடிப்பதில்லை.

தமிழகத்தில் தற்போது ஒருசில கோவில்களில் இறை நம்பிக்கை உள்ள ஒருசிலரால் இந்த முறை இன்றும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.



## தீய சக்திகளை அழிக்கும் பூததாண்டவம்

பூத தாண்டவம் என்பது சிவபெருமான் ஆடிய எண்ணற்ற தாண்டவங்களுள் ஒன்றாகும். இந்த தாண்டவம் நவ தாண்டவங்கள் மற்றும் பன்னிரு தாண்டவங்களில் ஒன்றாகப் போற்றப்படுகிறது. இந்த தாண்டவத்தை சிவபெருமான் பேய்களுடன் ஆடுகிறார். இந்தக் கோலத்தை பண்டாரம் என்றும் சொல்கின்றனர்.

திருவெண்காட்டில் இந்த பூதநடனத்தை சிவபெருமான் ஆடுகிறார். இந்த திருவெண்காடானது, சுவேதவனம், பிரம்ம மாசானம், ஆதி சிதம்பரம் என்றும் அழைக்கப்படுகிறது. பேய்வரி என்றும் இதனை அழைப்பர்.

யானை வடிவில் வந்த அரக்கனை கொன்று, யானையின் தோலினை உடலில் போர்த்தி சிவபெருமான் ஆடிய நடனம் பூத தாண்டவமாகும். இந்த தாண்டவம் நவ ராத்திரியின் ஏழாவது நாளில் சிவபெருமானால் ஆடப்படுகிறது. இந்த நிகழ்வை பார்த்தால் தீய சக்திகள் விலகும்.

# கிளிகள் வழிபடும் திருவீழிமிழலை சிவாலயம்






இறைவன் அனைத்து உயிர்களுக்கும் உரியவன் என்பதை பல்வேறு புராணங்களின் வாயிலாக இறைவன் உணர்த்தியுள்ளான்.

மனிதர்களுக்கு மட்டு மல்ல, விலங்குகள் பறவைகள் பூச்சிகள், போன்றவற்றிற்கும்இறைவன் சொந்தக்காரன், இதை மெய்ப்பிக்கும் வகை யில், திருவீழிமிழலை சிவத்தலத் தில் இன்றும் கிளிகள் சுவாமியைவழிபட்டு கொண் டிருப்பதாக கூறுகின்றனர்.

கும்பகோணத்திலிருந்து சுமார் 26 கிலோமீட்டர் தொலைவில் திருவீழிமிழலை என்னும் ஊரில் அமைந்துள்ள சிவாலயத்தில் உள்ள திரு வீழிநாதர் பல்வேறு சிறப்புகள் பெற்றவர்.

இச்சிவாலயம் இரண்டா யிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலயமாகும்.



இச்சிவனை வழிபட்டால் கண்ணில் ஏற்பட்ட நோய்கள் குணமாகிவிடும், திருமணம் வாய்ப்பு தள்ளிச் செல்கிறவர்களுக்கு, திருமணம் விரைந்து நிகழும், புத்திர பாக்கியம் அமையப் பெறாதவர்களுக்கு குழந்தைபேறு அமையும், பொருளாதார மற்றும் சொத்துப் பிரச்சனைகள் உள்ளவர்கள் வழிபட்டால் பிரச்சனைகளுக்கு உடனடி தீர்வு ஏற்படும்.

இத்தலத்தில் மேலும்ஒரு சிறப்பாக இத்தலத்தில்வீற் றிருக்கும் இறைவன் கரு வரைக்குப் பின் ஒரு சிறிய துவாரம் உள்ளது.

இத்துவாரத்தின்வழியாக இன்றும் கிளிகள்வந்து வழி படுவதாக கூறப்படுகிறது. மனிதர்களுக்கும் பறவை களுக்கும் காட்சிதரும் ஒரே சிவாலயம் இதுதான். மேற்கண்ட பிரச்சனைகள் உள்ளவர்கள் அவசியம் இத் திருத்தலத்திற்கு சென்றால் தீர்வு கிடைக்கும்.

# மரணமும்
# மரணத் தீட்டும்

ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கடமைகளை செய்யவேண்டும் என்பது நியதி, (உதாரணமாக ஒருபொழுது உணவு சமைக்கவேண்டுமென்றால், அதற்கு தேவையான காய்கறிகள், வாங்குவது, தானியங்கள் சேகரிப்பது, அவற்றை சுத்தப்படுத்துதல், அவற்றை சமைக்க நெருப்பு மூட்டுதல், சமையல் கலையின்படி உணவு சமைத்தல், பிறகு சாப்பிடுவது, சாப்பிட்டு முடித்தபின் பயன்படுத்திய சாதனங்களை சுத்தப் படுத்துவது) இவையெல்லாம் செய்தால்தான் ஒருவேளை பசியையே போக்க முடியும்.

இதைப்போன்று மனிதனாக பிறந்தவர்கள், இப்பிறப்பிற்கும், மறுபிறப்பிற்கும் தேவையான பலன் களைப் பெற தன் வாழ்நாட்களில், ஒவ்வொரு நாளும் ஒருசில செயல்களை செய்தால்தான் மேற்கண்ட பிறவிக்கு தேவையான நற்பலன்களை சேகரிக்க முடியும்.

இதுபோன்ற செயல்களைச் செய்யும்போது, ஆண் அல்லது பெண்களுக்கு ஒரு சில தடங்கள்கள் ஏற்படும், அத் தடங்கள் களை சமாளிப்பதற்காக, நித்திய கர்மாக்களை செய்வதிலிருந்து விலக்கு அளிக்கப்படும், இந்த விலக்கை தீட்டு என்று குறிப்பிடுவார்கள்.

(உதாரணத்திற்கு கூறவேண்டுமானால், வாரத்தின் ஏழு நாட்கள் வேலைக்கு செல்பவர்களுக்கு ஒரு நாள் விடுமுறை கொடுப்பது போன்று)

இந்த நியதியை இந்து மதத்தில் சைவம், வைணவம், சாக்தம், ஜைனம், போன்ற ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒவ்வொரு விதத்தில் நித்திய கர்மாவிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

இந்தவகையில் பிறப்பு, இறப்பு, போன்ற நிகழ்வில் சொல்லப்பட்டுள்ள தீட்டுக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

குறிப்பாக பெரும்பாலும் இறப்பு சமயத்தில் ஒவ்வொரு விதத்தில் நித்திய கர்மாவிலிருந்து விலக்கு கொடுக்கப்படுகிறது. அது பற்றி கருடப்புராணத்தில் விரிவாக



கொடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீமந்நாராயணரிடம் பணிந்த கருடாழ்வார் ஆசௌசம் எனப்படும் தீட்டு தொடர்பான விபரங்களை எடுத்துரைக்க வேண்டும் என்று வேண்டினார்.

கருடனே...!! ஒருவருக்கு புத்திரன் பிறந்தாலும், இறந்துவிட்டாலும் அவருடைய தாயாதிகளுக்கு 10 நாட்கள் வரை தீட்டு உண்டாகும். தீட்டு உடையவர்கள் இல்லத்தில் தீட்டுகள் நீங்கும் வரை ஹோமம், ஆராதனைகள் யாவும் தவிர்க்கப்பட வேண்டும். தீட்டு உடையவர் வீட்டில் தீட்டு காலம் நீங்கும் வரையில் தீட்டு இல்லாத யாரும் உணவு உண்ணக்கூடாது.

ஒருவர் தீப்பற்றி இறந்து போனாலோ, சிங்கம் புலி போன்ற கொடிய விலங்குகளால் மரணம் ஏற்பட்டாலோ, வெளிநாடுகளுக்கு சென்று அங்கு சென்று அவ்வூரில் மரணமடைந்தாலோ அவர்களுக்கு உடனே கர்ம காரியங்களை செய்தல் கூடாது.

அப்படி செய்தால் அவருடைய குடும்பத்தாருக்கும், உற்றார், உறவினர்களுக்கும் தீட்டு உண்டாகும். வாழ்ந்து கொண்டிருந்தவர் இயல்பான முறையில் இறந்து இருந்தால் அவர் இறந்துவிட்ட செய்தியை கேட்டவுடன் குளிக்க வேண்டும்.

நாட்டை ஆளுகின்ற தலைவனுக்கும், வேள்விகளை நடத்துகின்ற வேதம் உணர்ந்த அந்தணனுக்கும், தவம் செய்து கொண்டிருக்கும் அந்தணனுக்கும் அவர்களுடைய தாயாதிகள் இறந்தால் தீட்டு என்பது இல்லை.

அதைப்போலவே திருமணக்கோலத்தில் இருக்கின்றவர்களுக்கும், திருவிழா நடத்த கரங்களில் காப்பு அணிந்தவர்களுக்கும் தாயாதிகள் இறந்தால் அவர்களுடைய தீட்டு இவர்களை சாராது. பசு, மங்கை, அறிவில் சிறந்த நன்னெறி உணர்ந்த வேதம் அறிந்த சான்றோர் பெருமக்களை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு இருக்கக்கூடியவர்களும், நாட்டினை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு கொண்டிருப்பவர்களும், போரிடும்போது இறந்து விட்டாலும் அவர்களை சார்ந்த உறவினர்களுக்கு ஒருநாள் மட்டுமே தீட்டு உடையதாகும்.

| | |
|---|---|
| ஒருவரின் தாய் இறந்தால் | ஒரு வருடம் சுப காரியம் செய்ய, கோவில் செல்ல விலக்கு |
| ஒருவரின் தந்தை இறந்தால் | ஒரு வருடம் சுப காரியம் செய்ய, கோவில் செல்ல விலக்கு |
| ஒருவரின் மனைவி இறந்தால் | மூன்று மாதங்கள் சுப காரியம் செய்ய, கோவில் செல்ல விலக்கு |
| ஒருவரின் சகோதரன் இறந்தால் | ஒன்றரை மாதங்கள் சுப காரியம் செய்ய, கோவில் செல்ல விலக்கு |
| ஒருவரின் பங்காளிகள் இறந்தால் | ஒரு மாதம் சுப காரியம் செய்ய, கோவில் செல்ல விலக்கு |




### யாருக்கெல்லாம் தீட்டு என்பது இல்லை?

கருடனே...! ஒரு மனிதன் பூமியில் பிறந்து வாழ்ந்து சுக துக்கங்களை அனுபவித்து வயது மூப்பின் காரணமாக மரணம் அடைவதே உயர்ந்ததாகும். அதை விடுத்து வயது மூப்பின் காரணமாகவும், நோயின் கொடுமையை தாங்க முடியாமலும் தற்கொலை செய்து கொள்வது என்பது மகா பாவமாகும்.

கொடிய நஞ்சு உண்டும் அல்லது நீரிலோ பாய்ந்து உயிரை மாய்த்து கொள்கின்றனர். இவ்வாறு இறந்தவர்களுக்கும் நரகத்தில் இடம் உண்டு. என்று கருடப்புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

## அவசியம் கடைபிடிக்க வேண்டியவைகள்...

- இறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரணித்தவரை அடக்கம் செய்ய போனாலும், முகம் மற்றும் தலையில் சவரம் செய்து கொண்டாலும் இரு முறை குளிக்க வேண்டும்.
- 88 அடிகளுக்குள் பிணம் (சவம்) இருந்தால், எடுக்கும்வரை, சமைப்பது, சாப்பிடுவது கூடாது.
- ஸந்யாசியின் சவமானால் அந்தப் பகுதிக்கே தீட்டுக் கிடையாது.
- நகரங்களுக்கு மேற்படி தோஷங்கள் எதுவுமில்லை.
- ஸந்யாசிகளின் மரணத்தினால் அவரின் பங்காளிகளக்குத் தீட்டில்லை.
- ராஜாங்கத்தால் கொலை தண்டனை விதிக்கப்பட்டவனுக்கு உடனே கர்மா செய்யலாம்.
- துர் மரணம் செய்து கொண்டவனுக்கு 6 மாதம் கழித்து கர்மா செய்ய வேண்டும் என்பது விதி ஆயினும் 24 நாட்கள் கழித்து செய்வது என்றும் ஒரு விதி உள்ளது.
- தற்செயலாய் துர்மரணம் அடைவோருக்கு தீட்டு, தர்பணம் முதலியவை கடைபிடிக்க வேண்டும்.
- தற்கொலை செய்துகொண்டவனுக்கு தீட்டு, தர்பணம் இவை இல்லை.
- கர்மா செய்பவனுக்கு 11ம் நாள் கர்மாவிற்குப் பின் தீட்டுப் போகும்.
- கல்யாணமான பெண் இறந்தால் அவள் பிறந்த வீட்டுப் பங்காளிகளுக்கு தீட்டில்லை.
- பிறப்புத் தீட்டுள்ளவனை 4 நாளைக்கு மேல் தீண்டினால் அதிகம் தோஷமில்லை.
- ஒரு தீட்டுக் காரன் மற்றொரு தீட்டுக்காரனைத் தொடக் கூடாது.
- தீட்டுள்ளவன் வீட்டுக்கும் அவன் சாமான்களுக்கும் தீட்டுண்டு.
- பிரம்மச்சாரிகள் கர்மா செய்தால் அதனுடன் தர்பணம் (உதகதானம்) தனியாக இல்லை.
- மனைவி கர்பமாக இருக்கும்போது தானம் வாங்குதல், தூரதேச யாத்திரை போதல் கூடாது.
- சவத்துக்கு முன்னாலும், பக்கவாட்டிலும் போகக் கூடாது.
- சிராத்த தினத்தன்று துக்கம் விசாரிக்கச் செல்லக் கூடாது.
- தன் மனைவி கர்பமாய் இருக்கும்போது தாய், தந்தை தவிர மற்றவர்களின் சவத்தை சுமக்கலாகாது.
- ப்ரம்மச்சாரிகள் தாய் தந்தை சவத்தைத் தவிர மற்வர்கள் சவத்தைச் சுமக்கக்கூடாது.
- தீட்டுக் காரர்கள் ஆலயத்திற்குள் செல்லக் கூடாது.
- தீட்டுக்காரர்களை தீட்டில்லாதவர்கள் நமஸ்கரிக்கக் கூடாது. தீட்டுக்காரரும் அப்படியே.
- ஜனன, மரண தீட்டிலும் ஏகாதசி, துவாதசி விரதம் விடக் கூடாது. உபவாஸம் மட்டும் இருக்கலாம், பூஜை செய்யக்கூடாது.
- சாவு தீட்டுக்காரர் மெத்தை போன்றவற் றில் படுக்கக் கூடாது. தினமும் தீர்த்தமாட வேண்டும்.
- சிசுக்கள் இறந்தால் புதைத்த தினம் முதல்தான் தீட்டு
- மரணத் தீட்டு ஜனனத் தீட்டைக் காட்டிலும் பலம்
- மரணத் தீட்டின்போது வந்த பிறப்புத் தீட்டு மரணத் தீட்டுடன் முடியும்.
- பெற்ற குழந்தை பத்துநாள் பிறப்புத் தீட்டிற்குள் இறந்தால் அதற்காகத் தனியாகத் தீட்டில்லை. பிறந்ததிலிருந்து 10 நாள் விலகும்.
- மாதா பிதாக்களின் மரணத்தில் புத்திரர்களுக்கும், கணவனனின் மரணத்தில் பத்தினிக்கும் எப்போது கேட்டாலும் அதிலிருந்து 10 நாள் தீட்டு உண்டு.



# தஞ்சை பெரியகோவில் கட்ட இடம் தேர்வு செய்த

# வராஹி அம்மன்!

தஞ்சை பெரிய கோவிலை கட்டியது யார் என்று கேட்டால், அனைவரும் ராஜராஜசோழன் என்று கூறிவிடுவோம்.

ஆனால் அக்கோவிலை கட்டுவதற்கு நிலத்தை தேர்வு செய்து கொடுத்ததே வராகி தேவி என்ற உண்மை நிறையபேருக்கு தெரியாது.

சோழமன்னர்களின் வெற்றி தேவதையாக வராஹி அம்மன் விளங்கினாள். சோழ மன்னர்கள் எந்தச் செயலையும் தொடங்கும் முன்பு வராஹிக்கு சிறப்பு வழிபாடு செய்வர். ராஜராஜ சோழன் வராஹி அம்மனை வழிபட்ட பின்னரே எதையும் செய்வார். குறிப்பாக போருக்கு புறப்பட்டுச் செல்லும் போது வராஹி அம்மனுக்கு சிறப்பு வழிபாடுகள் நடத்திய பின்னர் தான் செல்வார். அதனால் ஒவ்வொரு முறையும் வெற்றி பெற்றனர். இதனால் வராஹி அம்மன் சோழர்களின் வெற்றி தெய்வம் ஆனாள்.

மகாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்தபோது அவரது அவதார சக்தியாக உருவானவள் வராஹி, சப்த கன்னிமார்கள் பிராமி, வைஷ்ணவி, மகேஷ்வரி, கவுமாரி, வராஹி, இந்திராணி, சாமுண்டி இவர்கள் முறையே பிரம்மா, விஷ்ணு, சிவன், குமரன், இந்திரன், யமன், திருமால் ஆகிய தெய்வங்களின் சக்திகள். இவர்களில் வராஹி, பன்றி முகமும், பெண்ணின் உடலும் கொண்டவர். நான்கு கரங்களை உடையவர் பின்இரு கரங்களில் தண்டத்தினையும், கலப்பையையும் கொண்டிருப்பார். இவர் கருப்பு நிற ஆடையுடுத்தி, சிம்ம வாகனத்தில் அமர்ந்திருப்பார் சக்தி வழிபாட்டு முறையில் ராஜராஜேஸ்வரி என்ற ஸ்ரீ வித்யா வழிபாடு சிறப்பானது. இவருக்கு நான்கு கைகள், முன்கைகளில் கரும்பு வில், புஷ்பபாணங்களையும், மேல்கைகளில் அங்குசம், பாசமும் ஆயுதங்களை கொண்டிருப்பவர். இந்த நான்கு ஆயுதங்களும் நான்கு சக்திகளாக உருப்பெருகின்றன. இவற்றில் கரும்பு வில் சியாமளாவாகவும், புஷ்பபாணங்கள் வராஹியாகவும், அங்குசம் சப்தகன்னிகளாகவும், பாசம் அஸ்வாரூடாவாகவும் உருப்பெறுகின்றன.

ஆனிமாதம் அமாவாசை கழிந்த பஞ்சமி திதியில் ஸ்ரீ வித்யாவின் கையில் இருந்த புஷ்பபாணங்கள் வராஹியாக உருவாகின. இவற்றில் வராஹி அம்மன் படைத்தலைவியாக இருப்பதால் தேவி மகாத்மியத்தில் வரக் கூடிய மதுகைடபவதம், சும்பரிசம்பவதம், சண்டமுண்டவதம், மகிஷாசுரவதம் போன்ற அசுரர்களுடைய யுத்தத்தில் முக்கிய பங்கு வகித்தது. அம்பாள் வெற்றியைத் தேடித் தருகிறாள். சக்தி வழிபாட்டு சங்ககாலம்






முதலே சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. சக்தி வழிபட்டிற்கும் நவராத்திரிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. புரட்டாசி மாதம் அமாவாசையை அடுத்து சாரதா நவராத்திரி, தை அமாவாசையை அடுத்து சியாமளா நவராத்திரி, பங்குனி அமா வாசைக்கு அடுத்து வருவது வசந்த நவராத்திரி, ஆனி அமாவாசையை அடுத்து ஆஷாட நவராத் திரியும் கொண்டாடப்படுகிறது. ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியின் படைத்தலைவியான வராஹி அம்மன் பக்தர்கள் வேண்டிக் கொள்வதை வழங்கக் கூடியவள். விவசாயம், வீடு, நிலம் தொடர்பானவற்றில் வெற்றியை அருள்பவள். பயிர்களை விளைவிப்பதும், பலன்தருவதும் கடமையாக கொண்டவள்.

இந்த வராகியை தனது இஷ்ட தேவதையாக கொண்டாடியவர் ராஜராஜ சோழன். இவர் தஞ்சையில் பெரிய கோவிலை கட்டுவதற்கு பல இடங்களை தேர்வு செய்தார். ஆனால் ஒரு இடமும் சரியாக அமையாமல் இருந்தது.

இடம் அமையாத வருத்தத்தை போக்கிக் கொள்ளவும், மனதிற்கு புத்துணர்ச்சி தரவும் எண்ணி, ஒரு நாள் வேட்டைக்கு புறப்பட்டு சென்ற போது, ஒரு இடத்தில் அவருக்கு எதிராக பன்றி ஒன்று எதிர்த்து நின்றது. அதனை அவர் துரத்தி சென்றார்.

ஆனால் அது போக்கு காட்டி பல இடங்களுக்கு சென்று ஒரு பெரிய திடலில் வந்து படுத்துக் கொண் டது. இதனால் வியப்படைந்த ராஜ ராஜசோழன் அதனை கொல்லாமல் துரத்தினார். ஆனால் அது எழுந்து நின்று காலால் பூமியை தோண்டியது.

அந்தப் பன்றியின் செயல் எதையோ உணர்த்துவதாக நினைத்த ராஜராஜ சோழன், இதுகுறித்து தனது அரண்மனை ஜோதிடரை அழைத்து விவரம் கேட்டார்.

அப்போது கோவில் கட்ட இடத்தினை, வராஹி தேவி தேர்ந்தெடுத்து இருப்பதை தெரிவித்தார் ஜோதிடர். அந்த இடத்தில் பெரிய கோவில் கட்டும் முன்பு வெற்றி தேவதை வராஹிக்கு சிறிய கோவில் அமைத்து வழிபட்டு பின்னர் பணியை தொடங்கினார் ராஜராஜன்.

இவ்வாறு அன்னை வராகி தேவி காட்டிய இடத்தில் எந்தவித சிரமமுமின்றி அற்புத ஆலயம் அமைத்தார் ராஜ ராஜ சோழன்.

வராகி அருளால் ராஜ ராஜ சோழன்கட்டிய தஞ்சை பெரியகோவில் உலக பாரம்பரிய சின்ன மாக விளங்குகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இந்த அதிசய தலம் கட்டிட கலையின் சிறப்பையும், தமிழர்களின் கலாசார பெருமையையும் உலகிற்கு பறைசாற்றுகிறது.


புனிதவேல்

இதே சமயம் அன்னை வரா கிக்கும் பெரியகோவிலில் சன்னதி அமைத் தார். தஞ்சை பெரிய கோவிலில் பெருவுடையார் ஆலயத்தின் அக்னி திசையில், அம்பாள் சன்னிதிக்கு எதிரில் வராஹி அம்மனுக்கு கோவில் உள்ளது.

இக்கோவிலில் ஆனி மாத அமா வாசைக்கு பின் வரும் 10 நாட்க ளும் ஆஷாட நவராத்திரியாக கொண்



டாடப்படுகிறது. அப்போது ஸ்ரீவராஹி தேவிக்கு ஹோமம், அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். வராஹி தேவிக்கு ஒவ்வொரு நாளும் பூமியில் விளையும் பொருட்களை கொண்டு ஒவ்வொரு அலங்காரம் செய்யப்படுகிறது. ஆஷாட நவராத்திரியில் வராஹிதேவியை வழிபட்டால் குடும்ப பிரச்சினைகள், நீதிமன்ற வழக்குகள், நிலத்தகராறு பிரச்சினைகள் சுமுகமாகும்.

தீராத நோயால் அவதிப்படுபவர்கள் ஞாயிற்றுக் கிழமையிலும், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் திங்கட்கிழமையிலும், வழக்கு, பூமி சம்பந்தமான பிரச்சினைகள் உள்ளவர்கள் செவ்வாய்க் கிழமையிலும், கடன் தொல்லைகளில் அவதிப் படுபவர்கள்புதன்கிழமையிலும் வழிபட நலன் கிடைக்கும். குழந்தைவரம் கல்வியில் தேர்ச்சி பெற்று வெற்றி பெற வியாழக்கிழமையிலும் வழிபடலாம். வெள்ளிக்கிழமைஅன்று வழிபட்டால் பில்லி, சூனியம், ஏவல், தோஷம் நீங்கும்!

சனிக்கிழமையன்று வழிபட்டால் நினைத்த காரியம் கைகூடி வெற்றிபெறும். மாதத்தில் வருகிற வளர்பிறை, தேய்பிறை, பஞ்சமி திதியிலும் விரதம் இருந்து வழிபட்டால் நல்லது. வராஹி அம்மனை 16 முறை வலம் வந்து நெய்தீபம் ஏற்றி ஒருமனதோடு தர்ம சிந்தனையில் வழிபட்டால் எல்லா வகையிலும் வெற்றி கிட்டும்.!

தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்: 9841807572

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஒர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

# தவமும் செய்முறையும்

இந்துமதத்தில் தவம் என்பது இறைவனை அடையும் வழிமுறைகளில் ஒன்றாக பார்க்கப்படுகிறது. இந்த தவத்தை ஒருசில காரண காரியங்களுக்காகவும் ஒருசிலர் பயன்படுத்தியுள்ளனர்.

பகவத் கீதையின் 17வது அத்தியாயமான, சிரத்தாத்திரய விபாக யோகத்தில், கிருஷ்ணர், ஆத்ம ஞானத்தை அடையத் தேவையான தகுதிகளில் ஒன்றான தவத்தை, சாத்விக தவம், இராட்சத தவம் மற்றும் தாமச தவம் என மூன்றாக பிரித்து அருச்சுனனுக்கு கூறுகிறார்.

சாத்வீக தவம் ஆன்மீக முன்னேற்றத்திற்கு மட்டுமே செய்வது சாத்வீக தவமாகும். (உதாரணம்: ஆத்ம ஞானத்திற்காக செய்யும் தவம்)

இராட்சத தவம் தனது நன்மைக்கு மட்டுமே செய்வது இராட்சத தவமாகும். (குழந்தை அல்லது செல்வம் வேண்டி செய்யப்படும் தவம்)

தாமச தவம் பிறரைத் துன்புறுத்தும் நோக்கத்திற்காகச் செய்யும் தவமே தாமச தவமாகும்.

## முறையாக தவம் செய்வது எப்படி?

1. காலை மாலை இருவேளையும் சுமார் இருபது நிமிட நேரம் தவம் செய்ய வேண்டும்.
2. இடைப்பட்ட நேரத்திலும் அவ்வப்போது சிறிது நேரம் தவம் செய்ய வேண்டும்.
3. உண்ணும் போதும் பிற புலன் அனுபோகத்தின் போதும் ஆக்கினை மற்றும் துரியத்தில் உயிரின் அசைவை கவனிக்க வேண்டும். இது அறிவை அயராத விழிப்புநிலையில் வைத் திருக்க உதவும்.
4. பரபரப்பாக செயல்படுவதையும், உரக்கப் பேசுவதையும் தவிர்க்க வேண்டும்.
5. மௌனவிரத காலங்களில் அதிகமாக தவம் செய்யலாம்.
6. மனதில் பேராசை, சினம், வஞ்சம், பொறாமை, வெறுப்பு தற்பெருமை, அவமதிப்பு, முறையற்ற பால்கவர்ச்சி, அவசியமற்ற பயம், அதிகாரபோதை, ஆகிய தீய உணர்வுகளும் எழாமல் மனதின் தூய்மையை காத்துக்கொள்ள வேண்டும்.
7. அறிவை இயற்கைத் தத்துவ ஆராய்ச்சியிலும், உடல் மன நலத்திற்கான அற நெறி ஆராய்ச்சியிலும் வைத்திருக்க வேண்டும்.
8. ஒருநாள் நொடிப்பொழுதில் விண் (உயிர்) துகள்கள் அகக்காட்சியாக தெரியும். உள்ளுணர்வாக (Intuition) தத்துவங்கள் யாவும் விளங்கும்.
9. மனம் நிறைவு பெற்று அமைதி நிலை அடையும்.



# தெரியாத, புரியாத, ஆன்மிகத் தகவல்களை

**எளிமையாக தொகுத்து பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில் நமது இதழில் வெளியிட்டு வருகிறோம்...**

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free

இதுவரை வெளிவந்த

**130** க்கும் மேற்பட்ட

**இதழ்களை**

**aanmeegamalar.com**

**இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.**




# அனைத்திலும் காக்கும் அருள்மலையான் பாதம்




ஒருமுறை அசுரர்களின் கொடுமைகளை தாங்க முடியாமல் தேவர்கள் சிவபெருமானிடம் சென்று தமது குறைகளை முறையிட்டனர். சிவபெருமான் அசுரர்களுடைய கொடுமையை களைந்து அவர்களை காத்தருள விரும் பினார். தமது நெற்றிக்கண்ணில் இருந்து தீப்பொறி களைத் தோற்றுவித்தார்.

அவை தேவர்களினால் கங்கையில் கொண்டு விடப்பட்டன. கங்கை சரவணப் பொய்கையிலே கொண்டு சேர்த்தது. புராணங்களின்படி சிவனிடமிருந்து புறப்பட்ட தீப்பொறி, சரவணப் பொய்கையில் ஆறு பகுதிகளாக விழுந்தது. இது ஆறு குழந்தைகளாக உருப்பெற்றது. இது ஆறுமுகப் பெருமான் அவதரித்த தினமாக கருதப்படுகிறது. வைகாசி மாதம் விசாகம் நட்சத்திர தினத்தன்று இந்த அவதாரம் நிகழ்ந்தது.

சக்தியிடம் முருகப்பெருமான் விசாகனாக தோன்றிய நாள்.உலகத்து உயிர்கள் யாவும் உய்யும் பொருட்டு சிவபெருமானின் திருவிளை யாடலால் முருகப்பெருமான் குழந்தையான நாள்.அதனால்தான் முருகப் பெருமானுக்கு வைகாசி விசாகத்திருநாள் ஓர் பெருவிழாவாக கொண்டாடப்படுகிறது.

வைகாசி விசாகத்தன்று விரதம் இருந்து முருகனை வணங்கினால் ஞானமும்,கல்வியும் பெருகும். அற்புதங்கள் பல நிகழ்த்தும் முருகப் பெருமான் படிப்பறிவில்லாத சிறுவனுக்கு ஞானத்தை அருளிய தலம் கெட்டிச்செவியூர் அருகேயுள்ள தோரணவாவி.

பழங்காலத்தில் இப்பகுதியில் குளம், கிணறு போன்ற நீர்நிலைகள் அதிகமாக இருந்துள்ளது. நீர்நிலைகளை அக்காலத்தில் வாவி என அழைப்பதுண்டு.

இந்த நீர் நிலைகள் ஒரு தோரணம் போல் அமைந்ததால் இந்த ஊரின் பெயர் தோரணவாவி என அழைக்கப்பட்டதாம். குன்றுதோறாடும் முருகப்பெருமானுக்கு இந்த ஊரில் சிறு மலை மீது சுமார் 850 ஆண்டுகளுக்கு முன்னரே வழி பாடு நடைபெற்று வந்துள்ளது.

அக்காலகட்டத்தில் பல அற்புதங்களை நிகழ்த்திய முருகப்பெருமான் ஒரு சமயம் இப் பகுதியில் வாழ்ந்து வந்த நஞ்சையன் என்ற சிறுவன் மாடுகளை மேய்க்கும் பொழுது, தானும் அங்கு சிறுவனாக தோன்றி நஞ்சையனுடன் விளையாடிக்கொண்டிருந்தாராம்.

அற்புதம் நிகழ்த்த நினைத்த முருகப் பெரு மான் நஞ்சையனிடத்தில் என்னைப் பற்றி நீ பாடு எனக் கூறியுள்ளார். அப்போது நஞ்சையன் நான் படிப்பறிவு இல்லாதவன். எப்படி பாடுவது என வினவியுள்ளார்.

அப்போது முருகப்பெருமான் கள்ளிப்பாலை கொஞ்சம் தொட்டு அச்சிறுவனின் நாக்கில் "ஓம்" என்னும் பிரணவ மந்திரத்தை எழுத, கந்தனின் அருளைப் பெற்று "அருள்மாமலை வடிவேலனே" என்கிற பாடலை சந்த கவியாக இயற்றி பாடியிருக்கிறார். இந்த தகவல் ஊர்






முழுக்க பரவி, அருகாமையில் உள்ள ஊர் மக்க ளுக்கும் பரவ இத்தலம் பிரசித்தி பெற்றுள்ளது.

முருகப்பெருமான் படிப்பறிவில்லாத சிறு வனுக்கு ஞானத்தை அருளியதால் குமரன் குடி கொண்டுள்ள இம்மலைக்கு அருள் மலை எனப் பெயரிட்டுள்ளனர். இப்பகுதி மக்கள் வேண்டிடும் வரங்களை இந்த அழகன் தந்தருளியதால் "நீதான் எங்களுக்கு ஆண்டவன்" என மன முருகினார்கள். நின்ற கோலத்தில் நிறை அருளுடன் புன்னகை புரியும் இப்பெருமானுக்கு அருள்மலை ஆண்டவர் என திருநாமம் சூட்டி வழிபட்டு வந்தனர். பல்வேறு திருப்பணிகளைக் கண்ட இந்த ஆலயத்திற்கு கடந்த 2018 ஆம் ஆண்டு மஹா கும்பாபிஷேக பெருவிழா நடை பெற்று முடிந்துள்ளது.

அருள்மலை மீது ஏறிட 60 படிகள் உள்ளது. தமிழ்க் கடவுளான முருகப்பெருமானை வணங்க தமிழ் வருடங்கள் 60 எனக் குறிக்கும் விதமாக 60 படிகள் அமைக்கப்பட்டதாம். படியேறும் முன் பாக சிறு மேடை மீது விநாயகப்பெருமான் வீற்றிருக்கிறார்.

மேடை மீதேற உள்ள படியின் இருபுறமும் நாகர் திருமேனிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. விநாயகப்பெருமானை வணங்கிவிட்டு 60 படி களை கடந்தால் இடும்பன் சந்நிதி உள்ளது. ஆலயத்தின் முன்பாக குதிரை வாகனம் உள்ளது. மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்த சிறுவனுடன், தானும் சிறுவனாக தோன்றி விளையாடிக்கொண்டிருந்த முருகப்பெருமான் அச்சிறுவன் வளர்த்து வந்துள்ள குதிரையில் ஏறி சவாரி செய்தும் விளையாடியதாக பழங்காலத் தில் இருந்து கூறப்படுகிறது.

இதனை நினைவுபடுத்தும் விதமாக இந்த ஆலயத்தின் முன்பு குதிரை வாகனம் உள்ளதாம். ஆலயத்தினுள் நுழைந்ததும் முதலில் கிழக்கு நோக்கிய காசி விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதர் சந்நிதி உள்ளது. இதனையடுத்து முருகப்பெருமான் அருள்பாலிக்கும் ஆலயம் உள்ளது. "கல்லினால் ஆலயம் அமைத்தோர் கயிலை விட்டு அகலார் தாமே" என்பதற்கேற்ப காசி விஸ்வநாதர் சந்நிதியும்,முருகப்பெருமானின் சந்நிதியும் தனித்தனி மூலஸ்தானத்துடன் கருங் கற்களினால் எழுப்பப்பட்டுள்ளது.

முதலில் இத்தல மூலவரான அருள்மலை ஆண்டவரை வணங்கிட பக்தர்கள் செல்கின் றனர். இவர் சந்நிதியின் மகாமண்டபத்தில் பலி பீடம், மயில் வாகனம் உள்ளது. இதனை யடுத்து விநாயகர் தரிசனம் கிடைக்கின்றது.

அர்த்தமண்டபத்தையடுத்து கருவறையில் கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் அருள் நிறைந்து வேண்டிடும் பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை வழங்கும் அற்புத அழகு ததும்ப மூலவர் அருள்மலை ஆண்டவர் அருள் பாலிக் கிறார்.

படிப்பறிவில்லாத சிறுவனுக்கு ஞானத்தை அளித்த அருள்மலை ஆண்டவரை வணங்கி னால் கல்வியிலும், சிந்தனையிலும் சிறந்து விளங்குவார்கள் என்பது ஐதீகம். ஏழு அல்லது



ஒன்பது செவ்வாய்க்கிழமை இவரை வணங்கினால் திரு மணபாக்கியம் கைகூடுவ தாகவும், மகப்பேறு இல்லாத தம்பதியருக்கு மகப்பேறு வாய்ப்பதாகவும் இத்தலம் வந்து பலன்பெற்ற பக்தர் கள் பயபக்தியுடனும், பரவசத்துடன் அருள்மலை ஆண்டவரின் பல்வேறு மகிமையை சொல் கின்றனர். இவர் பக்தர்களால் கிருபாகர சுப்ரமணியசுவாமி என்றும் போற்றப்படுகின்றார்.

முருகப்பெருமானைவணங் கிய பின்னர் காசி விசாலாட்சி சமேதகாசிவிஸ்வநாதர் சந்நிதிக்கு சென்றால் மகாமண்டபத்தில் நந்தி யெம் பெருமானின் தரி சனம் கிடைக்கின்றது. இம்மண்ட பத்திலேயே விநாயகரும், காசி விசாலாட்சி அம்மனும் அருள்பாலிக்கின்றனர்.

கருவறையில் சிவலிங்க மூர்த்தியாக காசி விஸ்வநாதர் தரிசனம் தருகிறார்.

வெளிப்பிரகாரத்தில் தட்சி ணாமூர்த்தி, கன்னிமார், சண்டி கேஸ்வரர், காலபைரவர், சனீ ஸ்வரர் ஆகியோர் தரிசனம் கிடைக்கின்றது. வேங்கைமரம் தல விருட்சமாக உள்ளது.

வைகாசி விசாக நாளில் காலை 6 மணிக்கு மேல் சிறப்பு வழிபாடு ஆரம்பமாகிறது. சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்கார பூஜைகள் நடை பெறுகிறது.

நட்சத்திர அடிப்படையில் நாம் தெய்வங்களை வணங்கிடும் பொழுதுதான் அச்சமில்லாத வாழ்க் கை நமக்கு அமைகிறது. அதே சமயத்தில் பேராற்றலும் அவன் அருளால் நமக்கு கிடைக்கிறது.

முருகப்பெருமானுக்கு உகந்த நாளில் குறிப்பாக வைகாசி மாதம் வரும் ‘விசாக’ நட்சத்திரத்தன்று விரத மிருந்து வழிபட்டால் வையகத் தில் நல்ல வளமான வாழ்க் கை அமையும்.









செ.சு.சரவணகுமார்

பகை விலகும். பாசம் பெரு கும். அவனது திருப் புகழைப் பாடினால் எதிர்ப்புகள் அகலும். அன்றைய தினம் குடை, மோர், பானகம், தயிர்சாதம் போன்றவற்றை தானம் செய்தால் குலம் தழைக்கும் என்று முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள்.

செவ்வாய்க்கிழமை, அம்மா வாசை, சஷ்டி, கிருத்திகை, பௌர்ணமி, பிரதோஷம்ஆகிய மாத முக்கிய விரததினங்களில் சிறப்பு அபிஷேகம், அலங்காரம் முடிந்து தீபாராதனை நடைபெறுகின்றது.

வருட முக்கிய விரத தினங் களில் தைப்பூசம் ஐந்து நாள் பெரு விழாவாக இத்தலத்தில் கொண்டாடப்படுகிறது.

தைப்பூச நாளில் விநாயகப்பெருமானுக்கும், முருகப் பெருமானுக்கும் என இரண்டு தேர் இத்தலத்தில் ஓடுகிறது. கார்த்திகை தீபம், ஐப்பசி கந்த சஷ்டி விழா, பங்குனி உத்திரம் ஆகிய விரத தினங்களிலும் சிறப்பாக வழிபாடுகள் நடை பெறுகின்றது.

நம் வாழ்வில் அனைத்திலும் காக்கும் அருள்மலையான் பாதத்தை நீங்களும் வாய்ப்பு கிடைக்கும் நாளில் வணங்கி வாருங்கள் பக்தர்களே!

ஈரோடு மாவட்டம்,கோபி செட்டிபாளையம்பெருமா நல்லூர் சாலையில், கெட்டிச் செவியூர் என்ற பேருந்து நிறுத் தத்தில் இறங்கி 4 கி.மீ., பயணித் தால் தோரண வாவி உள்ளது.

கெட்டிச்செவியூரிலிருந்து கால்டாக்ஸி, ஆட்டோ மற்றும் பேருந்து வசதி உள்ளது. அர்ச்சகர் தொடர்புக்கு: 94434 19404

சென்னிவீரம்பாளையம்
செ.சு.சரவணகுமார்
தொடர்புக்கு: 93458 88883

ராமனுக்கு உதவிய அணிலைப் போன்று
ஆன்மிகத்திற்கு எங்கள் சேவை மிகச் சிறியது

# எங்கள் சேவைக்கு உங்கள் உதவி தேவை

ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக
ஆன்மிகமலர்.காம், ஆன்மிகமலர் மொபைல்-ஆப்,
இ-புத்தகம் ஆகியவற்றை எந்தவித கட்டணமுமின்றி
அனைவரும் படிக்கும் வகையில் இலவசமாக
வெளியிட்டு வருகிறோம்.

## இதுவரை 130 இதழ்களை கடந்துள்ளோம்.

இன்னும் எங்கள் சேவையை விரிவுபடுத்த
பொருளாதார உதவி தேவைப்படுகிறது.
உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட
வங்கி கணக்கின் மூலம் உதவலாம்.



**ஆன்மிகமலர் டிரஸ்ட்**
Tamilnadu Government Redg.304/2016

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

மேலும் விவரங்களுக்கு 09444228203
எண்ணில் தொடர்பு கொள்ளவும்

# இராசி பலன்




குறிப்பு: ஒருவரது தசா புத்தியே 70–75% வரையிலும், கோட்சாரம் 20–25% வரையும் பலனளிக்கும். ஆகவே இவை பொதுப்பலன்கள் என கொள்ளவேண்டும்.

**மேஷம் முதல் மீனம் வரையிலான 12 ராசிகளுக்கான பலன்கள்**

**அடுத்த 15 நாட்களுக்கு தரப்பட்டுள்ளது**

## (1.6.22 முதல் 15.6.22 வரை)




ஸ்ரீ வைத்தீஸ்வரன் அஸ்ட்ரோ ரிசர்ச் சென்டர், கிருஷ்ணகிரி

கி.கார்த்திகேயன். செல்: 7904761779




**மேஷம்:** ராசியாதிபதி ராசிக்கு 12 இல் தர்ம மற்றும் விரயாதிபதி குருவுடன். ராசியில் தன மற்றும் களத்திரகாரகன் சுக்கிரனுடன் ராகு. இரண்டில் பஞ்சமாதிபதி சூரியனுடன் புதன். 7 இல் கேது, 11 இல் சனிபகவான் சகோதர வழியில் மற்றும் சுய தேவைகளுக்காக சிலருக்கு சுப செலவுகள், கடன்கள் ஏற்படும். சிலர் தர்ம காரியங்களுக்காக செலவு செய்வீர்கள். கணிதம், நிர்வாகம், கம்ப்யூட்டர் துறையில் இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும். வேலையில் உள்ளவர்கள் வளர்ச்சி காண்பார்கள். 7 இல் கேது தம்பதியர் வீண் விவாதங்களை தவிர்க்க வேண்டும். சிலருக்கு தாயார் வழியில் திடீர் தன வரவு ஏற்படும். பூமி, நிலம், வீடு வாகன சேர்க்கை கடன் மூலம் ஏற்படும். தைரியம், உற்சாகம் கூடும். 13, 14 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. தொழிலாளர்கள், பணி யாளர்கள், வியாபாரிகள் எதிர்பார்தத உதவி, ஆதரவு, இலாபம் கிடைக்க பெறுவார்கள். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெற்று தேர்ச்சி அடைவார்கள். கோயில், குளம் போன்ற புனிதயாத்திரை சிலருக்கு உண்டாகும். பரிகாரம்: விநாயகர் வழிபாடு, ஆஞ்சநேயர் வழிபாடு. தர்ம காரியங்களுக்கு உதவி.

**ரிஷபம்:** ராசியாதிபதி சுக்கிரன் ராசிக்கு 12இல் ராகுவுடன். சூரியன், தன மற்றும் பஞ்சமாதிபதி புதனுடன் ராசியில் அஷ்டம மற்றும் லாபாதிபதி குரு 11 இல் சபதம மற்றும் விரையாதிபதி செவ்வாயுடன், ராசியக்கு 6 இல் கேது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. புதிய மற்றும் அவரச திட்டங்களை தவிக்கவும். யாருக்காகவும் கையெழுத்து ஜாமீன் போடுவதை தவிர்ப்பது நல்லது. தந்தையின் ஆதரவு, தந்தையால் உதவி உண்டு. பிள்ளைகளால் மகிழ்ச்சி உற்சாகம் உண்டாகும். படிப்பில் சிறந்து விளங்குவார்கள். சில நீண்ட கால சுய தேவைகள் பூர்த்தியாகும். சிலர் வெளிநாடு, வெளியூர் பயணம் மேற்கொள்வார்கள். தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள் அதற்காக செலவு செய்வீர்கள். நிதி சார்ந்த துறைகளில் பணியாற்றுவோர் எதிர்பார்த்த விஷயங்களை அடைவீர்கள். வேலை தேடுவர்களுக்கு வேலை கிடைக்கும். 11, 12 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. சகோதர சகோதரி உறவுகளில் சிறு பிணக்குகள் ஏற்படலாம் பொறுமையை கையாளவும். வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை. பரிகாரம்: சுப்பிரமணியர், முனீஸ்வரர் வழிபாடு. சீருடை பணியாளர்களுக்கு உதவி.



**மிதுனம்:** ராசியாதிபதி புதன் ராசிக்கு 12 இல் சூரியனுடன், யோகாதிபதி சுக்கிரன் ராசிக்கு 11 இல் ராகுவுடன், சப்தம மற்றும் கர்ம ஸ்தானாதிபதி குரு, ரோக மற்றும் லாபாதிபதி செவ்வாயுடன், சனி பகவான் 9 இல் மற்றும் கேது 5 இல், குடும்பம், தொழில்



சிறக்கும். புதிய வீடு, மனை வாங்கும் வாய்ப்பு சிலருக்கு கூடிவரும் அதற்கான கடன்தொகை வங்கிமூலம் விரைந்து கிடைக்கும். சுறுசுறுப்பு உற்சாகம் கூடும். புதிய முயற்சிகள் வெற்றியடையும். ஆயினும் 13, 14 தேதிகளில் சந்திரன் 6 ஆம் பாவத்தில் சஞ்சரிக்கிறார் புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. மனைவிக்கு பொன் பொருள் சேர்க்கை ஏற்படும். தர்மகாரியங்களில் ஈடுபாடு உண்டாகும் அதற்கான தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். பிள்ளைகளின் படிப்பு, தொழில் வகையில் செலவுகள் உண்டு. பணியாளர்கள், தொழிலாளர்கள் உழைப்பு அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு வேலையாட்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள். பெரியோர்கள் சாதுக்கள் தரிசனம் ஏற்படும். துணையின் உடல் நலத்தில் சிறுது கவனம் தேவை. பரிகாரம்: சூரிய நாராயணன், விஷ்ணு வழிபாடு. ஏழை குழந்தைகளுக்கு உதவி.

**கடகம்:** வார தொடக்கத்தில் 12 இல் உள்ள ராசியாதிபதி சந்திரன் 4 ஆம் தேதி ராசியில் சஞ்சரிக்கிறார். கவலைகள் மறைந்து உற்சாகம் மகிழ்ச்சி கூடும். 11 இல் சூரியன் மற்றும் புதன் தொழில் குடும்பத்தில் பெரியோர் வருகை, சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். காரிய அனுகூலம் உண்டு. குலதெய்வ வழிபாடு உண்டாகும். வீடு வாகன வகையில் சிலருக்கு செலவுகள் ஏற்படும். நீண்ட நாள் கடன்கள் வசூலாகும். எதிர்பார்த்த பண உதவிகள் கிடைக்கும். பிரயாணங்களில் கவனம் தேவை. காவல், சீருடை, நிர்வாகம் சம்பந்த பணிகளில் இருப்போருக்கு சாதகமான சூழல் நிலவும். இத்துறை சார்ந்த வேலைகளில் பணிக்கு முயற்சிப்போருக்கு வேலை, பதவி உயர்வு உண்டு. குழந்தைகள் படிப்பில் சிறிது மந்தநிலை நிலவும். சுக, சௌகரிய தேவைகளுக்காக நீண்டகால கடன்கள் சிலருக்கு உண்டாகும். பணிக்கு செல்லும் பெண்களுக்கு எதிர்பாராத பதவி உயர்வு, ஊதிய உயர்வை எதிர்பார்க்கலாம். 15, 16 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிக்கவும். பரிகாரம்: சனிபகவான் வழிபாடு, வயதானவர்கள், உடல் நலிந்தோர்களுக்கு உதவி.



**சிம்மம்:** ராசியாதிபதி சூரியன் ராசிக்கு 10 இல் தன மற்றும் லாபாதிபதி புதனுடன் புதாதித்ய யோகத்தில், சப்தமாதிபதி சனிபகவான் 7 இல் இருந்து ராசியை பார்க்கிறார். பஞ்சமாதிபதி குரு மீனத்தில், கர்மாதிபதி மேஷத்தில் சனியின் பார்வை பெறுகிறார். 3இல் கேது 7 இல் ராகு சுக்கிரனுடன், சுக சௌகரியங்கள் கூடும், தொழில், குடும்ப நிலவரம் திருப்திகரமாக இருக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவார்கள். கர்மகாரகன் சனிபகவானின் பார்வை கர்மாதிபதி 12 இல் உள்ள சுக்கிரனின் மற்றும் ராசியின் மீது வேலை தொழிலில் அலைச்சல் டென்சன் போன்றவை இருக்கும். காரியத்தில் சுணக்கம் ஏற்படும். சிலருக்கு நிலம் பூமி சேர்க்கை உண்டாகும். தைரியம் திடீர் காரிய ஜெயம் உண்டாகும். தனவரவு சீராக இருக்கும் ஆபரண சேர்க்கை உண்டாகும். 11, 12 தேதிகளில் புதிய முயற்சிகள் பலனளிக்கும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடிவரும். நீண்ட காலம் தடைபட்ட காரியம் நிறைவேறும். திருமணம் மற்றும் சுவை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். சுபவிரயம் உண்டு. துணையின் வழியில் ஆதாயம் உண்டு. பரிகாரம்: துர்க்கை வழிபாடு. சுமங்கலிகளுக்கு உதவு.



**கன்னி:** ராசியாதிபதி புதன் 9 ல் விரயாதிபதி சூரியனுடன் சேர்ந்து 7ஆம் பார்வையாக 3 ஆம் இடத்தை பார்க்கிறார். சப்தமாதிபதி குருவுடன் சேர்ந்து அஷ்டமாதிபதி செவ்வாய் சேர்ந்து ராசியை பார்க்கிறார் தனது 7ஆம் பார்வையால், 6 இல் கர்மகாரகன் சனிபகவான் தன மற்றும் தர்மாதிபதி சுக்கிரன் ராகுவுடன் சேர்ந்து 8 இல் மறைவு, இரண்டில் கேது. தைரியம் உற்சாகம் கூடும் எதிர்பார்த்த தன வரவு திடீர் தொழில் முறை திட்டங்கள் நிறைவேறும். பணியாளர்கள், தொழிலாளர்களுக்கு வேலைப்பளு அலைச்சல் அதிகரிக்கும் ஆனாலும் அதற்குண்டான பலன் கிடைக்கும். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும் பதவி, ஊதிய உயர்வு உண்டு. தந்தை வழியில் மருத்துவ செலவுகள் சிலருக்கு ஏற்படலாம். 5, 6 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. திருமணம், சுப நிகழ்ச்சிகளுக்காக செலவுகள் ஏற்படும். பிரயாணத்தில் கவனம் தேவை. சிலருக்கு வண்டி வாகன சேர்க்கையும் உண்டாகும். சிலர் பணி, வேலை நிமித்தமாக தற்காலிகமாக வெளியூர் பிரயாணங்களை மேற்கொள்வார்கள். மாணவர்கள் படிப்பில் மந்த நிலை நிலவும். பரிகாரம்: விநாயகர், ஆஞ்சநேயர் வழிபாடு, பிராணிகளுக்கு உணவளித்தல்



**துலாம்:** ராசியாதிபதி சுக்கிரன் ராசிக்கு 7 இல் ராகுவுடன், சந்திரன் ராசிக்கு 9 இல் லாபாதிபதி சூரியன் விரயாதிபதி மற்றும் தர்மாதிபதி புதனுடன் சேர்க்கை. கேது பகவான் ராசியில், குரு மற்றும் செவ்வாய் ராசிக்கு 6 இல் சனிபகவான் ராசிக்கு 5 இல் சுப செலவுகள் தாயார்வழி உறவுகள் வருகை அவர்களுக்கான செலவுகள் ஏற்படும். கோயில் வழிபாட்டிற்கு, தர்ம காரியங்களுக்காக செலவுசெய்வீர்கள். தொழிலில் அலைச்சல் டென்சன் அதிகரிக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு, பதவி உயர்வு, ஊதிய உயர்வு உண்டு எனினும் சக தொழிலாளர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. தேவையில்லாத வாக்குவாதங்களை தவிர்க்கவேண்டும். தந்தை அல்லது பிள்ளைகள் வழியில் சிறு செலவுகள் ஏற்படலாம். 8, 9 தேதிகளில் நினைக்கும் காரியங்களில் தடை தடங்கல் ஏற்படலாம். புதிய முயற்சிகளை தவிர்க்கவும். மாணவர்கள் கடுமையாக உழைத்து வெற்றி பெறுவார்கள். சிலர் சிறு பிரயாணங்களை மேற்கொள்வார்கள். பணியாளர்கள் தொழிலாளர்களுக்கு சிறப்பாக இருக்கும். பரிகாரம்: சனிபகவான் வழிபாடு, விநாயகர் வழிபாடு, முதியோருக்கு உதவு.



**விருச்சிகம்:** ராசியாதிபதி செவ்வாய் ராசிக்கு 5 இல் தன மற்றும் பஞ் சமாதிபதி குருவுடன், சப்தமாதிபதி சுக்கிரன் ராசிக்கு 6 இல் ராகுவுடன், கர்மாதிபதி சூரியன் லாபாதிபதி புதனுடன் சேர்ந்து 7 இல், சுகாதிபதி சனிபகவான் 4 இல், கேதுபகவான் 12 இல் சந்திரன் 8 இல் வருமானம், தொழில் நிலை திருப்திகரமாக இருக்கும். எடுத்த காரியங்கள் விரைந்து முடியும். பெரியோரிகளின் ஆதரவு ஆசி கிட்டும். நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். திருமண, சுப நிகழ்ச்சிகள் குடும்பத்தில் எதிர்பார்க்கலாம். வேலை தேடுவோருக்கு தகுந்த வேலை அமையும். பணியாளர்கள், தொழிலாளர்கள், நிதி, நிர்வாக துறைகளை சேர்ந்தவர்களுக்கு ஏற்றமான காலம். துணைவரின் நலனில் அக்கறை தேவை. பயணத்தில் நிதானம் அவசியம். 8, 9 தேதிகளில் புதிய முயற்சிகள் தவிர்க்கப்படுவது நல்லது. 10, 11 தேதிகளில் தொடங்கும் முயற்சிகள் விரைந்து முடியும். தாயார் மற்றும் தாய்வழி உறவுகள் மூலம் லாபம் அடைவீர்கள். சிலர் விமான பயணம், சுற்றுலா பயணம் மேற்கொள்வார்கள். தெய்வ வழிபாடு, சித்தர்கள் தரிசனம் உண்டாகும். மாணவர்கள் உற்சாகமாக உழைத்து பலனடைவர். பரிகாரம்: வெள்ளிக்கிழமைகளில் ராகு பகவானுக்கு ராகு கால பூஜை. துர்கை வழிபாடு, சுமங்கலிகளுக்கு மஞ்சள், குங்குமம், வளையல் தானம்.



**தனுசு:** ராசியாதிபதி குரு ராசிக்கு 4 இல் பஞ்சமாதிபதி செவ்வாயுடன், யோகாதிபதி சூரியன் ராசிக்கு 6 இல் சப்தம மற்றும் கர்மாதிபதி புதனுடன் இணைவு, லாபாதிபதி சுக்கிரன் 5 இல் ராகுவுடன், 11 இல் கேது தொழில், ஆரோக்கியம், தனவரவு சீராக இருக்கும். நீண்டநாட்களாக வசூலாதாக கடன்கள் சிலருக்கு வசூலாகும். பிள்ளைகள் வழியில் செலவுகள் மற்றும் விரயம் உண்டு. பணியாளர்கள் தொழிலாளர்கள் அதிக அலைச்சல், வேலைப்பளுவை சந்திப்பார்கள் எனினும் சீரான வளர்ச்சியை காண்பார்கள். உற்சாகமாக இருப்பீர்கள். தடைப்பட்டிருந்த ஆதாயங்கள் எதிர்பாராதவகையில் நிறைவேறும். தாயாரின் தங்கை (சித்தி) உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம். மாணவர்கள் படிப்பில் தடங்கல் ஏற்படலாம். 4, 5 ஆம் தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும். மனைவிக்கு ஆடை ஆபரண சேர்க்கை ஏற்படும். சகோதர உறவுகள் வளர்ச்சி காண்பார்கள். சிலர் குடும்பத்துடன் குலதெய்வ கோயிலுக்கு சென்று வருவார்கள். தந்தை வழி உறவுகளால் ஆதாயம் உண்டு. பரிகாரம்: விநாயகர், மஹாலக்ஷ்மி வழிபாடு. ஏழை தொழிலாளர்களுக்கு உதவி.



**மகரம்:** ராசியாதிபதி ராசிக்கு 2 இல், விஜய மற்றும் விரயாதிபதி குரு ராசிக்கு 3 இல் சுகாதிபதி செவ்வாயுடன் சேர்ந்து இருக்கிறார். கர்மாதிபதி சுக்கிரன் ராகுவுடன் சேர்ந்து கர்மா ஸ்தானத்தை பார்க்கிறார். அஷ்டமாதிபதி சூரியன் ராசிக்கு 5 இல் புதனுடன் சேர்க்கை. பத்தில் கேது துணிச்சல் தைரியம் கூடும். நீண்டநாள் தேங்கிய காரியம் விரைந்து முடியும். திருமணம், வைபவம் போன்ற சுப செலவுகள் உண்டு. சகோதர வழியில் ஆதரவு உண்டாகும். தொழிலாளர், பணியாளர்கள் வேண்டிய உதவிகளை மேலதிகாரிகளிடம் பெறுவார்கள். வண்டி, வாகன, ஆடம்பர பொருட்களின் சேர்க்கை ஏற்படும். தந்தை மற்றும் பிள்ளைகள் வழியில் ஆதரவு ஆதாயம் உண்டு. புதிய



தொழில் முயற்சிகளை தவிர்க்கவும். 6, 7 தேதிகளில் புதிய முயற்சிகளில் தவிர்ப்பது நல்லது. மலைக்கோவிலுக்கு சென்று வருவீர்கள். மனைவிக்கு உஷ்ண சம்பந்தமான தொந்தரவுகள் வந்து போகும். தர்மகாரியங்களுக்கு செலவு செய்வீர்கள். மூத்த சகோதர வழியில் வண்டி, வாகன உதவி உண்டு. 8, 9 தேதிகளில் புதிய காரியங்கள் ஜெயமாகும். பரிகாரம்: ஆஞ் சநேயர் வழிபாடு, விலங்குகளுக்கு உணவளிப்பது.

**கும்பம்:** ராசியாதிபதி சனிபகவான் ராசியிலேயே இருக்கிறார்,



தன, லாபாதிபதி குரு 2 இல் கார்யாதிபதி செவ்வாயுடன், 3 இல் சுகாதிபதி சுக்கிரன் ராகுவுடன், 4 இல் சப்தமாதிபதி சூரியன் புதன் சேர்க்கை, 9 இல் கேது பகவான், 6 இல் சந்திரன் தொழில், குடும்பம் வருமானம் சீராக இருக்கும், தொழிலில் முன்னேற்றம், இளைய சகோதர வழியில் ஆதரவு, முதலீடுகளில் லாபம். வங்கி, நிதி துறையை சேர்ந்தவர்களுக்கு உயர்வு. தாயார் சுகவீனம். கோயில் பிரயாணம், தந்தைக்கு அவரது தாய் வழி உறவுகளால் சிக்கல்கள். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள். மாணவர்களுக்கு ஞாபக மறதி, மனைவி பணிக்கு செல்பவர் எனில் பதவி, ஊதிய உயர்வு உண்டு. கணவன் மனைவி இடையே சிறு சிறு சலசலப்புகள். விட்டு கொடுத்து செல்லவும். 3, 4 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. 5, 6 தேதிகள் சிறிது உடல் நலனில் அக்கறை தேவை. தைரியம், உற்சாகம் சிறிது குறையும். குருட்டு தைரியத்தை தவிர்ப்பது நல்லது. குழந்தைகளின் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். பரிகாரம்: வெங்கடேச பெருமாள் வழிபாடு, ஏழை மாணவர்களுக்கு உதவி.



**மீனம்:** ராசியாதிபதி குரு ராசியில், உடன் 2, 9 ஆம் அதிபதி செவ்வாயுடன், 2 இல் ராகுவுடன் 3, 8 ஆம் அதிபதி சுக்கிரன். 3 இல் பஞ் சமாதிபதி சூரியன் சுக, சப்தமாதிபதி புதனுடன், லாபாதிபதி சனி 12 இல், 8 இல் கேது, சந்திரன் ராசிக்கு 6 இல் ஆரோக்கியம், மனநிலை சீராக இருக்கும். கோவத்தை தவிர்க்கவும். தொழில், பண விஷயத்தில் யாருக்கும் வாக்கு கொடுக்கவேண்டாம், எதிர்பாராத திடீர் தன, ஆபரண சேர்க்கை ஏற்படும். குழந்தைகள் படிப்பில் சிறந்து விளங்குவார்கள். வியாபாரிகளுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். சிலர் வியாபார தேவைக்காக நிலம், கடை, அல்லது புதிய வாகனங்களை வாங்குவார்கள்.3, 4 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது, 5, 6 தேதிகள் புதிய முயற்சிகளுக்கு உகந்தது. நீண்டகால கடன்கள் அடையும். பணியாளர்கள், தொழிலாளர்கள் நிலை சிறப்பாக இருக்கும். சிலருக்கு மருத்துவ செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு. இந்த ராசி பெண்மணிகளுக்கு ஆடம்பர தேவைகளுக்காக வீண் விரையம் ஏற்படும். புதிய சொத்துகள் சேரும். அரசு பணியாளர்களுக்கு எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பரிகாரம்: ஆஞ்சநேயர் வழிபாடு, சுமங்கலிகளுக்கு உதவி.


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# வழக்கு குடும்ப சிக்கல்களை தீர்க்கும் சிவபெருமான்

செங்கல்பட்டு மாவட்டம் பொன்விளைந்த களத்தூர் உள்வட்டத்தில் அமைந்துள்ளது ஆனூர் கிராமம். கி.மு. 3–ஆம் நூற்றாண்டு முதல் மக்கள்வாழ்நது வந்துள்ளதை அங்குள்ள பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் மூலம் அறியலாம் அபராஜித மன்னரால் கி.பி.893 எடுக்கப்பட்டுள்ளது. முதலாம் பரந்தகன் கி.பி. 923–இல் விளக்கெரித்துள்ளான்.

கம்பவர்மனால் கி.பி.973–இல் பராமரிக்கப் பட்டுள்ளது. பார்த்திவேந்திரனால் கி.பி.979–இல் மண்டபம் கட்டப்பட்டுள்ளது. அவ்வாண்டு நரசிம்ம மாறமையன் ஸ்ரீபலி உற்சவத்தில் இசை முழங்க நிலமளித்துள்ளான். முதலாம் இராஜராஜன் ஆட்சிக்காலத்தில் ஆனியூர் மகா சபையினர் ஒன்று கூடி பிராமணர் வேதம் ஒத பட்டவிருத்தி என்ற பெயரில் நிலம் அளித் துள்னர்.

நான்கு மாணவர்களுக்கு வேதம். அலங் காரம். பீமாம்சம் ஆகியவை சொல்லித்தர ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சாமவேத பண்டிதர்க்கு நிலமும் வழங்கப்பட்டது. முதலாம் இராஜராஜன் 25 ஆவது ஆட்சியாண்டின்போது கி.பி. 1010 ல் உத்திரமேலூரைச் சுந்த பெரயி ஸ்ரீதர் கிரமவித்தன் என்பவன் நிலம் விலைக்கு வாங்கி கோயிலுக்கு தானமாக அளித்துள்ளான்.

மன்னன் இராஜராஜனுடைய மெய்க்கீரத்தி யும் இதில் உள்ளது. பெரிய நாட்டவர் சபை செயல்பட்டுள்ளது முதலாம் குலோத்துங்க னுடைய 47–ஆவது ஆட்சியாண்டுக் கல் வெட்டு நந்தா விளக்கெரிக்கவும் வழிபாடு தொடர்ந்து நடைபெறவும் சபை நிலத்தை விற்ற தைக்குறிப்பிடுகின்றது.

திருவம்பங்காடுடைய மகாதேவர் என்ற பெயரோடு திருவம்பங்காட்டுப்பெருமானடிகள் என்ற பெபயரும் சிவனுக்கு வழங்கப்பட்டது.

சோழர்காலத்தை சேரந்த மூதேவிஎனப்படும் ஜேஷ்டா மற்றும் வினாயகர் சிற்பங்களும் கண்டறியப்பட்டுள்ளன.

வழிபாட்டுக்கு பொன்னளித்துள்ளான். முதலாம் குலோத்துங்கள் சௌந்தரவல்லி தாயார் சன்னதி கட்டியுள்ளான்.திருவெம்பங்காடுடைய மகாதேவர் என்கின்ற மூலவருக்கு வழிபாடு மற்றும் விளக்கெரிக்க கிராம சபையினர் நிலவிற்பனை செய்துள்ளனர்.மூன்றாம் இராஜ ராஜன் கி.பி.1221–ல் பராமரித்துள்ளான்.

இந்த செய்திகள்


www.aanmeegamalar.com







கோயிலில் உள்ள ஐந்து கல்வெட்டுக்கள் மூலம் தெரியவருகின்றது. பிற்கால பல்லவர்கள் சோழர்கள் ஆட்சிக்காலத்தில் வழிபாட்டில் சிறந்ததாக கல்வெட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கோயில் அமைப்பு:

சிவன் கோயில் கிழக்கு நோக்கிய வாயிலை கொண்டிருக்க அம்மன் சௌந்தரவல்லி தெற்கு பார்த்தபடி அருள்பாளிக்கின்றார்.

தினமும் இருவேளை பூசை நடைபெறுகின்றது. கோயிலுக்கு எதிரே கோயிலுக்கு சொந்தமான பெரிய குளம் உள்ளது. கோயிலுக்கு வெளியே கொடிமரம் உள்ளது. கோயிலின் உள்ளே பலிபீடமும் நந்தி மண்டமும் உள்ளது. ஆலய மணிக்கு தனியாக மண்டபம் இப்போது கட்டியுள்ளார்கள். கருவறை சன்னதியில் மூலவரும் தனி சன்னதியில் அம்பாள் சன்னதியும் உள்ளது. கருவறை தேவகோட்டங்களில் யோக தட்சணாமூர்த்தி.






பிரம்மா, விஷ்ணு, துர்கை சிற்பங்களாக காட்சியளிக்கின்றனர். விநாயகர், முருகர், பைரவர். சண்டிகேஸ்வரர் என தனிதனி கோயில் கள் உள்ளன. கோயிலில் அர்த்த மண்டபம், முன் மண்டபம் அமைந் துள்ளது. தெற்குபுற சுற்று சுவரில் ஜேஷ்டாதேவி மற்றும் வினாயகர் புடைப்பு சிற்பங்களாக அமைந்துள்ளது.

கோயில் பெயர் காரணம்:

சிவபெருமானிடம் பாசுபத அஸ்திரம் பெற அர்ச்சுனன் இங்கு தவமிருந்தார். இறைவன் அவருக்கு காட்சியளித்து அஸ்திரம் அளித்ததால் இறைவன் அஸ்திரபுரீஸ்வரர் என அழைக்கப்படுகின்றார். வம்பகாட்டு மகாதேவர் எனவும் அழைக்கப்படுகின்றார்.

கோயிலின் சிறப்பு:

இங்குள்ள இறைவனை வழிபட்டால் வழக்கு குடும்ப சிக்கல்கல் தீர்வதாக பக்தர்கள் கூறுகின்றனர்.

கும்பாபிஷேகம்: சுமார் 1500 வருடங்கள் பழமையான இந்த ஆலயம் பராமரிப்பு இன்றி இருந்தது.ஆனூரைச்சேர்ந்த ஓய்வு பெற்ற அரசு அதிகாரியான திரு. தேவராஜன் அவர்கள் ஆனூர் கிராம முன்னேற்ற அறக்கட்டளை சார்பில் கோயிலை பழமை மாறாமல் புனரமைக்கவிரும்பி அரசிடம் அனுமதி பெற்று கடந்த 2016 திருப்பணி துவங்கி தற்போது நிறைவடைந்துள்ளது. ஆலய தொடர்புக்கு: 9551066441.


வேலன்

– வேலன்,
போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.

## கடவுளை நம்பினால் ஏமாற்றத்திற்கு இடமில்லை

- ❖ நேற்றைய பொழுது முடிந்து விட்டது. இனி எப்படி இருக்க விரும்புகிறாய் என்பதை மட்டும் சிந்தித்துப் பார்.
- ❖ இன்றைய பொழுதை நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்துவது உன் கையில்தான் இருக்கிறது.
- ❖ அன்பும், அமைதியும் உன்னிடம் இருந்தால் மட்டுமே பிறருக்கு சேவை செய்வது எளிது.
- ❖ பிரச்னைகளைச் சரியாக புரிந்து கொள் ளாததே துன்பத்திற்கு காரணமாக இருக்கிறது.
- ❖ மனிதர்கள் ஏமாற்றலாம். ஆனால், கடவுளை நம்புபவர்களுக்கு ஏமாற் றத்திற்கு இடமேயில்லை.

– ஸ்ரீஅன்னை



## வாழ்வில் சுமை இருக்காது



- ❖ எண்ணம், சொல், செயல் மூன் றாலும் கடவுளைச் சிந்தித் திருப்பவனின் வாழ்வில் சுமை என்பது சிறிதும் இருக்காது.
- ❖ நல்லவர்களின் நட்பைத் தேடிச் செல்லுங்கள். இதனால் மனதி லுள்ள அறியாமை நீங்கி விடும்.

– ரமணர்

# 130 இதழ்களை கடந்துள்ளோம்

ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக மூன்றுவித சேவைகளை செய்து வருகிறோம்

1.ஆன்மிகமலர்.காம்
2.ஆன்மிகமலர் Mobile app
3. ஆன்மிகமலர் இ-மேகசின்

## எங்களது அடுத்த சேவையாக

**ஆன்மிகமலர் பப்ளிகேஷன் வாயிலாக**

திருக்குறள், சிவபுராணம், கந்தசஷ்டி கவசம்
ஆன்மிக எழுத்தாளர்களின் ஆன்மிக தொகுப்பு,
ஆன்மிக துணுக்குகள், மகான்களின் சரித்திரம்,
அறிவுரைகள், பழமொழிகளின் தொகுப்பு,
போன்றவற்றை இ-பப்ளிகேஷன் முறையில்
வண்ணமயமான இ-புத்தகங்களாக தயாரிக்கவிருக்கிறோம்.

இந்த புத்தகத்திற்கு sponsor செய்ய விரும்புபவர்களை சிறப்பிக்க, அவர்களின் குடும்ப விசேஷங்கள், திருமணம், பிறந்த நாள், கிரகபிரவேசம் போன்ற சுப நிகழ்வின் நினைவாக அல்லது அவர்களது தொழில் சம்பந்தப்பட்ட விளம்பரங்களை வெளியிடுவதற்காக இந்த புத்தகத்தில் ஒரு பக்கம் ஒதுக்கித்தரப்படும். இதன்மூலம் எங்கள் சேவையில் நீங்களும் பங்கேற்று இறை சிந்தனையை பரப்பலாம்.

sponsor செய்ய விரும்புபவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்:
சி.வி.நடராஜன் 9444228203

# படைத்தல் தத்துவம்

கடவுள் உருவாக்கிய மதம்

பதினாறு இதழ்கள் பிறக்கும் சக்ர பகுதியை சர்வ பரிபுரா சக்ரம் என்ற அழைக்கிறார்கள் இந்த ஒவ்வொரு இதழ்களிலும் அன்னையின் பதினாறு யோகினி சக்திகள் இருப்பதாக நம்பப்படுகிறது இந்த சக்திகள் பக்தர்களின் வேண்டுதலை நிறைவேற்றும் தேவதைகள் ஆவார்கள் யோக நெறியில் இந்த பகுதி சுவாதிஷ்டானம் என்று அழைக்கப் படுகிறது.

இதில் மனம் சித்து சித்தம் அகங்காரம் ஆகிய நான்கு அந்த கரணங்களும் பார்த்தல் கேட்டல் நுகர்தல் சுவைத்தல் உரைத்தல் நினைவு வைத்தல் கனைத்தல் சூட்சமம் சுக்குலம் காரணம் பெயர் வளர்ச்சி ஆகிய பனிரெண்டு தன்மாத்திரைகள் அடங்கியுள்ளன இத்தகைய பதினாறு இயல்புகளும் நிரம்பி இயங் கினால் தான் உலக வாழ்க்கைக்கு தேவையான உடல் நலம் மனநலம் அறிவு நலம் பண்பு நலம் சமூக நலம் பொருள் நலம் ஆகிய பெயர்கள் கிடைக்கும் அதனால் தான் இப்பகுதியை படைத்தல் தத்துவம் என்கி றார்கள்

அடுத்ததாக பதினாறு இதழ் தாமரைக்குள் எட்டு இதழ் கொண்ட மூன்றாவது ஆப ரணம் பிறக்கிறது இது சர்வ சம்மோகன சக்ரம் என்ற பெயர் கொண்டதாகும் எட்டு இதழ் கமலத்தில் எட்டு யோகினிகள் உள்ளதோடு அனங்க மன்மதன என்ற சக்திகளும் அருளாட்சி செய்கின்றன அனங்க என்றால் உருவம் இல்லாதது என்ற பொருள் வரும் அதனால் இந்த பிரபஞ்சமானது உருவம் இல்லாத பரப்ரம மத்தில் இருந்து உதயமானது என்ற மூல கருத்து வெளிப்படுகிறது மேலும் இந்த எட்டு



இதழ்களும் எட்டு பிரம்மாணங்களாகும் மேலும் இந்த சக்ரம் மனித உடலின் சதை பகுதியை குறிக்கிறது. அடுத்ததாக உள்ள நான்காவது ஆவரணத்தில் கீழே எழும்மேலே ஏழும் ஆக பதினாறு உலகங்கள் அமைந்துள்ளன இதை சர்வ சௌபாக்கிய தயகச்சக்கரம் என்று அழைக்கிறாா்கள் மேலே உள்ள ஏழு கோணத்தில் பூர் பூவ சுவ ஜன தப சக்திய ஆகிய ஏழு உலகங்களையும் கீழே உள்ள ஏழு கோணங்கள் அதல விதல சுதல நிதல ரசாதல மகாதல பாதாள ஆகிய ஏழு உலகங்களையும் காட்டுகிறது அது மட்டும் அன்றி ஒலித்தத்துவமான சட்ஜமம் சமம் காந்தாரம் மத்திமம் பஞ்சமம் தைவதம் விவாதம் ஆகிய ஏழு சப்த லயங்களையும் ஊதா கருநீலம் நீலம் பச்சை மஞ்சள் ஆரஞ்சி சிவப்பு ஆகிய நிறதத்துவங்களையும் காட்டுகிறது அதாவது இறை சக்தி ஓசையாகவும் ஒளியாகவும் இருப்பதை இந்த கோணங்கள் விளக்குகின்றன




ஐந்தாவது ஆவரணமான சர்வார்த்த சாதக சக்கரத்தில் கீழே ஐந்து கோணமும் மேலே ஐந்து கோணமும் உள்ளது இந்த பத்து கோணங்களும் மனித உடலில் உள்ள தச வாயுக்களை குறிக்கிறது ஸ்ரீ அன்னையை வழிப்படும் தசமகாவித்தியா தோற்றங்களை இது காட்டுவதாகவும் அமைந்துள்ளதாக கூறலாம் மேலும் மேலே உள்ள ஐந்து கோணங் கள் சரஸ்வதி லஷ்மி கௌரி மகேஸ்வரி மனோன்மணி என்ற அன்னையின் பஞ்ச வடிவங்களையும் கீழே உள்ள ஐந்து கோணங்கள் தத்புருஷம் சத்யோஜாதம் அகோரம்வாம தேவம் ஈசானம் ஆகிய ஈஸ்வர பஞ்சப்ரம்ம வடிவத்தையும் காட்டுகிறது

தேவியை வழிபடும் சர்வ சோமணி சர்வவிக்ஷிரவினி சர் வாஷ்ணி சர்வசந்தசர்வேசினி மாதினி சர்வமகோரங்குசா சர்வகேச சர்வ பிகம்ப சர்வயோனி சர்வதிகண்டா ஆகிய பத்து மூர்த்திகளையும் இந்த கோணங்கள் காட்டுகின்றன இதே போல அன்னமய கோசம் ஞானமய கோசம் மனோமய கோசம் விஞ் ஞானமய கோசம் ஆனந்தமய கோசம் என்னும் ஐந்து உடல்களையும் அந்த உடல்களை தாக்கும் தோஷங்களான பொய்யாமை கொல்லாமை கள்ளுண்ணாமை திருடாமை காமியாமை ஆகிய ஐந்து நெறிகளை சுட்டிக்காட்டுகிறது இப்பகுதி விந்து அணுக்களையும் கருமுட்டைகளையும் காட்டுவதாக தாந்திரிக தத்துவம் காட்டுகிறது

ஆறாவது ஆவரணமான சர்வஞசக்கரம் ஆஞ்சாசக்கரம் என்று அழைக்கப்படுகிறது இது உருவவழிபாட்டின் விளக்கமாகும் அன்னை யானவள் சர்வத்தையும் அருளும் மூர்த்தியாகவும் திகழ்கிறாள் சர்வத்தையும் அழிக்கும் சக்தியாகவும் திகழ்கிறாள் உடல் இயக்க ரீதியில் இந்த ஆவரணம் எழும்பில் உள்ள மட்சையை குறிக்கும்



சர்வரோகர சக்கரம் என்ற ஏழாவது ஆவரணம் பிந்துவை குறிப்பதாகும் இதில் எட்டு கோணங்கள் உண்டு இக்கோணங்கள் வசினி காமேஸ்வரி மோதினி விமலா அருணா ஜெயினி சர்வேஸ்வரி கௌலனி ஆகிய வித்தைக்கும் ஞானத்திற்கும் உரிய தேவதைகள் வாசம் செய்கிறார்கள் இந்த அஷ்ட கோணத்தின் அதிதேவதை திரிபுரா ஆவாள் யோகமார்க்கத்தில் கூறப்படும் இயமம் நியமம் ஆசனம் பிரணாயமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி ஆகிய எட்டு நிலைகளும் இதில் அடங்குகிறது



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

மேலும் நூல்களை கற்றுத்தரும் போத குரு பேதங்களை அறிய செய்யும் வேதகுரு மந்திர சித்தி பெற வழிகாட்டும் மிசிதகுரு செயலுக்கம் தரும் சூட்ச்சக குரு வார்த்தைகளால் ஞானத்தை போதிக்கும் வாசககுரு தான் பெற்ற ஞானத்தை சுயநலம் இல்லாமல் சீடருக்கு தரும் காரககுரு முத்தியடைய வழிகாட்டும் விஷிதககுரு ஆகிய அஷ்டகுருக்களையும் இக்கோணங்கள் உணர்த்துகின்றன

அன்னை ஆதிபராசக்தியின் நான்கு திருகரங்களும் அந்த கரங்களில் இருக்கும் பாசம் அங்குசம் கரும்பு வில் மலர் கணை ஆகிய நான்கு கருவிகளும் இந்த எட்டு கோணத்தின் வடிவங்கள் எனலாம் இதில் பாசம் என்பது ஆசையின் வடிவம் அங்குசம் என்பது கோபத்தின் வடிவம் கருப்பு வில் என்பது மனதின் வடிவம் மலர் கணை என்பது உணர்வுகளின் வடிவம்

எட்டாவதாக உள்ள ஆவரணம் முக்கோண மாக அமைந்த காயத்திரி பீடமாகும் அன்னை இந்த காயத்திரி பீடத்தில் திரி புராம்பா என்ற திருநாமத்தோடு அமர்ந்திருக்கிறாள் காமேசி வச்சி ரேசி பகமாலினி என்ற மூன்று தேவதைகளையும் முக்கோணத்தில் ஒவ்வொரு பகுதியிலும் நிறுத்தி உள்ளாள் மனிதனை கடைநிலைக்கு தள்ளுகின்ற ஆணவம் கர்மா மாயை என்ற மும்மலங்களும் இச் சக்கரத்தை பூஜிப்பதினால் எரிந்து சாம்பலாகி விடுகிறது

சுழன்றடிக்கும் சூறாவளிஎன்ற பேராசை அடங்கி விடவும்ஆயிரம் இடர்பாடுகள் வந்தாலும் அனைத் தும் தவிடு பொடி ஆகிவிடவும் வயிரக்கியத்தை பெறவும் சம்சார சாகரத்தில் உழன்று கொண் டிருக்கும் மனமென்னும் மாய பிசாசை வசக்கி ஒடுக்கி அன்னையின் திருபாதத்தில் பூர்ண சரணாகதி அடைய செய்யவும் இச்சக்கரம் வழிவகுக்கும்

இறுதியாக சர்வானந்த மயசக்கரம் என்ற ஒன்பதாவது ஆவரணம் ஸ்ரீ சக்ரத்தின் மைய புள்ளியான பிந்து மையமாகும் இது பேரானந்தம் அடையக்கூடிய அம்பிகையின் திருகாட்சியை நேருக்கு நேராக தரிசிக்கும் நிலையை காட்டுகிறது அம்மையும் அப்பனும் இந்த பிந்து பகுதியில் ஒன்றாக இணைந்து நிற்கிறார்கள் இன்பம் துன்பமற்ற ஆழ்ந்த சமாதி நிலை பிந்து பகுதி காட்டும் சின்னமாகும் யோக மார்க்கத்தில் சொல்லப்படும் சமாதி நிலையின் மூன்றவது கண் திறக்கும் அனுபவமே ஸ்ரீ சகரத்தில் உள்ள மூல பிந்தாகும்.


யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434



ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# இறைவனுடன் ஒருமுகப்படுத்துதல்

ப்ரிய குருதேவர் அருளுகிறார்: “ஒருவருடைய முதல் மனக்குவிப்பு இறைவனுடன் இணைதல்மீது இருக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் பலவகைப்பட்ட உலகச்சூழ்நிலைகளை நீங்கள் அனுபவிக்கும்போது, இறைவனுடன் ஒன்றிய தன்மையை மனதளவில் பயிற்சி செய்யுங்கள். அந்த உணர்வு நிலைக்கு இடையூறாக ஒரு வலி வரும்போது, “சரி. நான் நித்திரையிலிருந்தால் இந்த வலியை உணரமாட்டேன். ஆகவே நான் ஏன் இப்பொழுது அதை உணர வேண்டும்? எல்லா அனுபவங்களும் மறையும் கனவுகளே”, எனச் சிந்திக்கவேண்டும். எல்லா சோதனைகளையும் வெல்ல இவ்வகையில் பயிற்சி செய்யுங்கள்.”

“மனஒருமைப்பாட்டின் முதலாவது நிலை, நீங்கள் விரும்பிய எதையும் உங்கள் மனக்கண்ணில் பார்க்கும் ஆற்றலைப் பெறுவதாகும். உதாரணமாக இந்த அறையை, நான் கண்களை மூடியவுடன், அது உள்ளவாறு அப்படியே என்னால் பார்க்க முடியும் அளவிற்கு, அதனைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டும் அதன்மீது மன ஒருமுகப் பட்டுக்கொண்டும் இருக்க முடியும். இதுதான் ஆழ்ந்த மன ஒருமைப்பாட்டின் முதல்படி; ஆனால் அனேகர் இதைப் பயிற்சி செய்யும் பொறுமையைப்பெற்றிருக்கவில்லை; எனக்கு அந்தப் பொறுமை இருந்தது.”

“மன உருவகப்படுத்தலை நீங்கள் தொடர்ந்து பயிற்சி செய்யும்போது, உங்கள் எண்ணங்கள் உருப்பெறுதலை நீங்கள் காண்பீர்கள். நீங்கள் எதைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறீர்களோ, அது உருவாக்கப்படவேண்டும் என நீங்கள் கட்டளை இட்டீர்களானால், பிரபஞ்ச நியதி அதை நிஜமாகவே உருவாக்க ஏற்பாடு செய்யும். ஓர் ஆப்பிள் பழத்தை நான் நினைக்கும்பொழுதே அது என் கையில் தோன்றுகிறது என வைத்துக்கொள்வோம். அது மிக உயர்ந்த மன ஒருமைப்பாட்டு செயல்பாடு. இமாலயத்தில் லாஹிரி மகாசயருக்கு பாபாஜி தீட்சை அளித்த சமயம் ஓர் அரண்மனையை உருவகப்படுத்தியதைப் போன்று, மகான்கள் உங்களுடைய கண்களின் முன்பு எதை வேண்டுமானாலும் தோன்றச்செய்ய முடியும். (ஒரு யோகியின் சுயசரிதம் அத்தியாயம் 34) அது மன ஒருமைப்பாடு சக்தியின் மிக உயர்ந்த நிலையின் வெளிப்பாடு. முயற்சியில்லாமலும் மன ஒருமைப்பாடு இல்லாமலும் மதிப்பு மிக்க எதையும் அடைய இயலாது.”

மேலும் அவர் தொடர்கிறார்: “உடல் மற்றும் உலகக் கவலைகளைப்பற்றி உணர்ச்சிமிக்கவராக இராதீர்கள். மேலும் எவரும் உங்களைப் புண்படுத்த



அனுமதிக்காதீர்கள். உங்கள் உணர்வு நிலையை தனியே வைத்திருங்கள். எல்லோருக்கும் நல்லெண்ணத்தை அளியுங்கள்; ஆனால் எவரும் உங்களை நிலைகுலையச் செய்யமுடியாதபடி ஓர் உணர்வுநிலையை வளர்த்துக்கொள்ளுங்கள். தினமும் மற்றவர்ககளை மகிழ்வுறச் செய்ய முயலுங்கள். உங்கள் ஞானத்தை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். வாழ்க்கையில் உற்சாகம் இழப்பதற்கு உங்களை அனுமதிக்காதீர்கள். ஒன்றைப்பற்றிய அனைத்தையும், அனைத்தையும் பற்றிய ஓரளவும் கற்றுக்கொள்ளுங்கள். எவ்வளவு அதிகமாகத்தேடுகின்றீர்களோ, அவ்வளவு அதிகமாகக் காண்பீர்கள் என்பதை உணருங்கள். எண்ணத்தின் பிரதேசங்கள் எல்லையற்றவை. அனைத்தையும் நீங்கள் அடைந்துவிட்டதாக நினைத்த அந்த வினாடியில் உங்களைச் சுற்றி குறுகிய எல்லையை அமைத்து விடுகிறீர்கள். தேடுங்கள், மேலும் மேலும் தேடுங்கள். தொடர்ந்து தேடுங்கள். அப்பொழுது பணிவு என்னும் உங்கள் பள்ளதாக்கில் இறைவனின் ஞானக்கடல் நிரம்பும்.”

“உண்மையான ஞானத்தை வளர்க்க நீங்கள் செய்யக்கூடிய மிகச் சிறந்த செயல், இவ்வுலகம் ஒரு கனவு என்ற உணர்வைப் பயிற்சி செய்வதாகும். தோல்வி வந்தால் “அது ஒரு கனவு” எனக் கூறுங்கள். அதன் பின்பு தோல்வியின் எண்ணத்தை உங்கள் மனதிலிருந்து அகற்றிவிடுங்கள். எதிர்மறையான நிலைமைகளுக்கு மத்தியில் சாதகமான மற்றும் ஆக்கபூர்வமான விதத்தில் சிந்தித்தும் செயல்பட்டும் “எதிர்ப்பைப்” பயிற்சி செய்யுங்கள். சகிப்புத்தன்மை (“திதிக்ஷா”) யைப் பயிற்சி செய்யுங்கள், அதாவது விரும்பத்தகாத அனுபவங்களுக்கு இடம் கொடாமல் ஆனால் மனநிலை குலையாமல் எதிர்ப்பது. நோய் வரும்போது, உங்களுடைய மனம் கலங்க அனுமதிக்காது, உடல்நல விதிகளைப் பின்பற்றுங்கள். நீங்கள் செய்யும் அனைத்திலும் கலக்கமுறாமல் இருங்கள். எவ்வகையான சோதனைகளுக்கு ஆட்பட்டிருந்தாலும் அவற்றின் எதிரான பயங்கரச் சூழ்நிலையை அழகானதோர் அனுபவமாக மாற்ற முடியும். இந்த மனவிடுதலையானது, பொருளின் திட, திரவ மற்றும் இதர அனைத்து வடிவங்களும் இறைவனுடைய எண்ணத்தின் வெளிப்பாடுகள் என்பதை நீங்கள் உணரும்பொழுது வந்து சேரும்.”

“ஆழ்ந்த தியானம் செய்வதே உண்மையான



குருப்ரியா

விடுதலையைப் பெறுவதற்காகிய மிகச் சிறந்த வழி. ஸெல்ஃப் ரியலைசேஷன் ஃபெலோஷிப் (யோகதா சத்சங்க சொஸைடி) பாடங்களில் உள்ள உண்மைகளைக் கற்பதனால் தியானம் செய்வது எப்படி என்பதை நீங்கள் அறிந்துகொள்ள முடியும்” பிறர் எவரும் சர்க்கரையின் ருசியை உங்களுக்கு அளிக்க முடியாது; நீங்களே அதை ருசிபார்க்க வேண்டும்.”

அவர் தனது அனுபவம் ஒன்றைக் கூறுகிறார் “நேற்று எனது அனறயில் நான் என் வாழ்வின் கடந்த காலத்தை திரும்பி நோக்கிக்கொண்டு அமர்ந்திருந்தேன். புற உலகில் மிகவும் மகிழ்ச்சியை அளிப்பதாக வாக்குறுதி அளித்த அனைத்தும் என்னை ஏமாற்றிவிட்டதை உணர்ந்தேன். ஆனால் ஒன்று மட்டும் என்னை ஒருபோதும் ஏமாற்றவில்லை. என் அக அமைதி, வர்ணிக்க முடியாத மகிழ்ச்சிப் பேரலைகள் என் ஆன்மாவின்மீது பொங்கி வழிகின்றன. சென்ற வருடங்களில் பலவிதமான அனுபவங்களை நான் கடந்தபோது அந்த மாறாத அக அமைதி இறைவனின் இருப்பிற்கு எனக்கு நிரூபணமாக இருந்துள்ளது.”

“இதை நான் சிந்தித்துக்கொண்டிருந்தபோது ஒரு பேரொளியை திடீரெனக் கண்டேன். மற்ற அனைத்தும் மறைந்துவிட்டன. உணர்வு இருந்தது, அவ்வளவுதான். எனது கரம் ஒரு கரமாக அல்லாமல் ஓர் உணர்வாகவே இருந்தது. எனது கரங்களை ஒன்று சேர்த்து தொட்டதும் அங்கு சதையில்லை; உணர்வு மட்டுமே இருந்தது. பிறகு நான் எண்ணங்களாக மாறிவிட்டேன். என்னைச்சுற்றியுள்ள அனைத்தும் அந்த ஒளி அறை மற்றும் உடலின் எடை ஆகிய அனைத்தும் எண்ணங்களல்லாது வேறொன்றுமல்ல என்பதையும் நான் புரிந்துகொண்டேன்.”

அவர் தொடர்கிறார்: “அது பெரும் மகிழ்ச்சியூட்டும் ஓர் அனுபவமாக இருந்தது. கடந்தகால விஷயங்களுக்காக நான் உணர்ந்த துயரம் மற்றும் வருத்தம் எல்லாம் மறைந்துவிட்டிருந்தன. அவைகளின் இடத்தில் ஒரு மாபெரும் விடுதலை உணர்வு இருந்தது.”

“அந்த இறை ஸ்ரீ அமைதி உணர்வுநிலை முடிவற்றது. உண்மையான ஆனந்தநிலை அது ஒன்று மட்டுமே. மற்றவையெல்லாம் உங்களை ஏமாற்றும். இறை – இருப்பின்

ஆனந்தம் மட்டுமே உண்மையானதால், வேறு எதுவும் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தர இயலாது. இந்த இறுதியான மெய்ஞானத்தை அடைவதற்கு எல்லாவிதமான மனித அனுபவங்களுக்கும் உட்படவேண்டும் என்ற அவசியமில்லை மற்றவர்களுடைய வாழ்க்கையைக் கவனித்து நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வுலகில் எதுவும் உங்களை ஒருபோதும் மகிழ்விக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்வதற்காக ஏன் முடிவின்றி மாறிமாறி வரும் காட்சிகள் எனும் நிகழ்வுகளில் ஆதரவின்றி சிக்கிக்கொள்ள வேண்டும்?"

"ஒருவர் உண்மையை இரண்டு வழிகளில் அறிந்துகொள்ளலாம்: அனேக நல்ல மற்றும் கெட்ட அனுபவங்களை அனுபவிப்பதன்மூலம் அல்லது ஞானத்தை வளர்ப்பதின் மூலம். நீங்கள் எந்த வழியை விரும்புகிறீர்களோ அதைத்தேர்ந்தெடுங்கள்" "ஞானத்தைப் பெற்றவன் மேலான சாந்தியடைகிறான்." என கிருஷ்ணன் கூறினான். (பகவத் கீதை அத் 4 ஸ்லோகம் 39) வேறெதையாவது நீங்கள் முதலாவதாக நாடினால் நிச்சயமாக ஏமாற்றமடைவீர்கள். "சரி, மற்றவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். ஆனால் நான் ஏமாறமாட்டேன்," என ஒவ்வொரு மனிதனும் நியாயப்படுத்திக் கொள்கிறான். இருப்பினும் அவன் ஏமாற்றப்படுவான். உண்மையான ஒரே அனுபவம், ஆனந்தத்தைத் தரும் அனுபவம், இறைவனின் இருப்பை உணரும் நிலையே," என்கிறார் அன்பிற்குரிய குருதேவர்.

மன ஒருமைப்பாட்டை பயிற்சி செய்ய வேண்டும் என்றும் அதாவது இறைவனுடன் இணைதல்மீது ஒருவருடைய மனக்குவிப்பு இருக்க வேண்டும் என்கிறார் குருதேவர். அதனால் சோதனைகள் அனைத்தையும் வெல்ல முடியும் என்கிறார் அவர். இந்த உலகக்கவலைகளைப் பற்றி உணர்ச்சி மிக்கவராக இல்லாமலிருந்தால் வாழ்க்கையில் நமது உற்சாகத்தை இழக்காமல் இருக்க முடியும் என்பது மட்டுமின்றி பிறரையும் மகிழ்விக்க முடியும் என்று அவர் உறுதியாகக் கூறுகிறார். அவருடைய உண்மையான கருத்துக்களுக்கு மேலான கருத்து, வேறு எதுவும் இல்லை. எனவே அவருடைய அரிதான போதனைகள் மட்டும் போதும். அதைப்படித்து பின்பற்றி வாழ்ந்தால் குருதேவருடைய அன்பும் பரிவும் தொடர்பும் நமக்கு மிகுந்த அளவில் கிடைத்துவிடும். அதனால் நமக்கு கிடைக்கவேண்டியவை அனைத்தும் கிடைத்துவிடும் என்பதில் துளியும் சந்தேகமில்லை.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

# தலைநகரில் இரண்டு விநாயகர் கோயில்களின் 'பாலஸ்தாபனம்'







## ஸ்ரீ இஷ்ட சித்தி விநாயகர் கோவில், கிழக்கு டெல்லி

அட்சய திருதியை தினத்தை ஒட்டி, 2022–ஆம் ஆண்டு மே மாதம் 3–ஆம்தேதி செவ்வாய்கிழமையன்று, டெல்லி ஸ்ரீ இஷ்ட சித்தி விநாயகர் ஆலயத்தில் ராஜகோபுரம் மற்றும் விநாயகர் கோபுரத்தின் 'கலசபாலாலயம்' பூஜைகளை ஸ்ரீ பிரகாஷ் சாஸ்திரிகள், ஸ்ரீ சங்கர சத்ரிகள் மற்றும் ஸ்ரீராம் சாஸ்திரிகள் இணைந்து செய்தனர். . வேதமந்திரங்கள் முழங்க, கணபதி ஹோமம், வாஸ்து உள்ளிட்ட பூஜைகளும் நடைபெற்றன. கும்பாபிஷேகப் பணிகளுக்கான ஆரம்பகால பூஜைகள் ஏப்ரல் 15, 2022 அன்று தொடங்கப்பட்டன. இந்த புனிதமான நாளில், கோயில் நிர்வாகம், அதன் நிறுவன உறுப் பினர்கள், நன்கொடையாளர்கள், தொடர்ந்துஆதரவளித்த அனைத்து நிறுவனர்களுக்கும் நன்றி தெரி வித்தது.

12 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், கிழக்கு தில்லி மயூர் விஹார் 3–ஆம் கட்டத்தில் அமைந் துள்ள ஸ்ரீ இஷ்ட சித்தி விநாயகர் கோயிலின் மகா கும்பாபிஷேகம் ஆகஸ்ட் 24, 2022 புதன்கிழமை அன்று நிகழ்த்தப்படும். சம்ப்ரோக்ஷணம் என்றும் அழைக்கப்படும் கும்பாபிஷேகம் தெய்வத்தின் மாய சக்திகளை ஒருங்கிணைத்து, ஒன்றிணைப்பதாக நம்பப்படும் ஒரு சடங்கு. இது இந்து கோவில் கும்பாபிஷேக விழாவின் ஒரு பகுதியாகும்.

ஸ்ரீ விநாயகர் மற்றும் ஸ்ரீ ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரியார்களின் ஆசீர்வாதத்துடனும், பக்தர்களின் ஆதரவுடனும், ஸ்ரீ ஆதி சங்கர சேவா சமாஜம் (Regd.) மயூர் விஹார் கட்டம் 3–இல் ஸ்ரீ இஷ்ட சித்தி விநாயகர் ஆலயம் நிறுவப்பட்டது. 1993–ஆம் ஆண்டு டெல்லி. பி.பி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் இந்த கோவிலுக்கு பூமி பூஜையில் தனது தெய்வீக பிரசன்னத்தால் ஆசீர்வதித்துள்ளார்.

மக்களின் நலனுக்காகவும், பாரம்பரியமற்றும் மத கலாச்சாரத்தை மேம்படுத்துவதன் மூலமும் 29 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

கோவிலின் முந்தைய கும்பாபி ஷேகம் 27.01.2010 அன்று செய்யப்பட்டது. ஸ்ரீ ஆதி சங்கர சேவா சமாஜம், அன்னதானம் மற்றும் பிற நிகழ்ச்சிகளைத் தவிர பல்வேறு சமய மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

## ஸ்ரீ சங்கடஹர கணபதி கோவில், கிழக்கு டெல்லி

ஜகத்குரு அருளிய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் ஆசீர் வாதத்துடன், ஏப்ரல் 15 வெள்ளிக்கிழமை, கிழக்கு தில்லி வசுந்தரா என்கிளேவில் உள்ள ஸ்ரீ சங்கடஹர கணபதி கோவிலின் ஹோமம், பாலஸ்தாபனம் நடைபெற்றது. மேலும், விக்னேஷ்வர பூஜை, புண்யா வாசனம், மகா







கணபதி ஹவனம், ஸ்ரீ லட்சுமி பூஜை, நவக்கிரக ஹவனம், குருபெயர்ச்சி, வாஸ்து சாந்தி, யாக சாலை நிர்மாணம் உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் நடைபெற்றன.

ஏப்ரல் 22ஆம் தேதி வெள்ளிக்கிழமை, கோ பூஜை (பசு மற்றும் கன்றுக்கு பூஜை), விக்னேஷ் வர பூஜை, புண்யாவாசனம், கலா கர்ஷணம், வேட்டி காரார்ச்சனை திரவியகுதி, பூர்ணாகுதி, தொடர்ந்து பாலாலய மூர்த்திகளுக்கு சிறப்பு அபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் தொடங்கியது.

அனைத்து பூஜைகளும் ஹோமங்களும் சிவாச்சாரியார் டாக்டர் வைத்தியநாதன் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் செய்யப்பட்டன, அவருக்கு பிஎஸ் ஜெய்சங்கர் சிவம், குருக்கள் சோமசுந்தரம் மற்றும் எஸ் கபாலீஸ்வர சிவம் ஆகியோர் உதவினர். முன்னதாக, இந்த கோவிலின் கும்பாபிஷேகம் ஆகஸ்ட் 2010 இல் மட்டுமே நடைபெற்றது.

மேலும், பாலாலயம்விழாவை ஒட்டி, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் ஜகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகள், 31 மார்ச், 2022 தேதியிட்ட கடிதத்தை வெளியிட்டு, விழாவை மட்டுமின்றி, அதன் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரையும் ஆசீர்வதித்துள்ளார்.



எஸ்.வெங்கடேசன்

இந்நிகழ்ச்சியில் ஸ்ரீ காஞ்சி மடத்தின் கடிதம் வாசிக்கப்பட்டது.

இதையொட்டி, ஸ்ரீ சங்கடஹர கணபதிக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, மகா தீபாராதனை நடைபெற்று, அனைவருக்கும் மகா பிரசாதம் வழங்கப்பட்டது. விழாவில் வசுந்தரா சுற்றுவட்டார பகுதிகள் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இக்கோயிலின் அடுத்த கும்பாபிஷேகம் செப்டம்பர் 7, 2022 புதன்கிழமை அன்று நடைபெறும். இந்தக் கோயிலுக்கு, தமிழ்நாடு கும்பகோணத்தைச் சேர்ந்த ஸ்தபதி வி ராதா கிருஷ்ணன் மற்றும் குழுவினரை நிர்வாகம் நிச்சயித்துள்ளது.

கிரானைட் கல்லில் செதுக்கப்பட்ட ஸ்ரீ சங்கடஹர கணபதி, வட இந்தியா முழுவதிலும் உள்ள மிக உயரமான விநாயகராக கருதப்படுகிறது. தில்லி மேம்பாட்டு ஆணையத்தால் ஒதுக்கப்பட்ட நிலத்தில் கட்டப்பட்ட இந்தக் கோயிலை வசுந்தரா என்கிளேவ் சர்வேஸ்வர சமாஜ் (VESS) நிர்வகிக்கிறது.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370

எங்கள் சேவைக்கு உங்களின் உதவி தேவை

# விருப்ப சந்தா




தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் **ரூ.10** முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள், கீழ்காணும் ஸ்கேனர் மற்றும் வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

Bank of Baroda

BHIM Baroda Pay

SCAN TO PAY

WITH ANY BHIM UPI APP

Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**

ACCOUNT NO. 49510100003648

IFSC CODE: BARB0KODAMB

(FIFTH CHARACTER IS ZORO)

BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

# உயிரற்ற உடலும் சூரிய அஸ்தமனமும்

இறுதி சடங்குகள் என்பது அனைத்து மதங்களிலும் நடத்தப்படும் ஒன்றாகும்.

ஆனால் மற்ற மதங்களுடன் ஒப்பிடுகையில் இந்து மதத்தில் அதிகளவு வித்தியாசமான இறுதி சடங்குகள் நடத்தப்டுகிறது.

ஆனால் இந்த ஒவ்வொரு சடங்கிற்கு பின்னரும் ஒரு காரணத்தை நம் முன்னோர்கள் வைத்துள்ளனர்.

இறந்தவர்கள் மரணத்திற்கு பிறகு அமைதியான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில்தான் அனைத்து இறுதிச்சடங்குகளும் நடத்தப்படுகிறது. ஆனால் பல இறுதி சடங்குகள் ஏன் செய்யப்படுகிறது என்பதே நமக்கு தெரியாது. இறுதி சடங்குகளுக்கும் பின்னால் இருக்கும் காரணங்களை பார்க்கலாம்.




### மூக்கில் பஞ்சு வைப்பது:

இறந்தவர்களின் உடல் என்பது பாக்டீரியாக்கள் அதிகம் வசிக்கும் இடமாக மாறிவிடும்.

எனவே அவர்களின் உடலில் இருந்து நுண்ணுயிர்கள் மூலம் சில வாயுக்கள் வெளிவரும்.

இதனால் சுற்றுசூழல் பாதிக்கப்படும். இதனை தடுக்கத்தான் நாடிகட்டு என்னும் பெயரில் காதையும், வாயையும் சேர்த்து கட்டுகிறார்கள்.

மேலும் மூக்கில் பஞ்சு வைக்கப்பட காரணமும் நுண்ணுயிர்கள் உடலில் பரவாமல் இருக்கத்தான்.

### விளக்கேற்றுவது:

இறந்தவர்கள் வீட்டில் கண்டிப்பாக விளக்கேற்றி வைக்க வேண்டும் என்பது முக்கியமான சடங்காகும்.

உயிர் சக்தியானது உடலை விட்டு பிரிந்து விட்டால் உடலானது வெற்றுடலாக மாறிவிடும். அவர்கள் உடலில் இருந்து வாயுக்கள் வெளியேற தொடங்கிவிடும். ஆன்மீகரீதியாக அவர்கள் உயிர் அலைகள் அந்த இடத்திலேயே சுற்றிவரும்.

இந்த அலைகள் மற்றவர்கள் உடலில் நுழைந்தால் அவர்கள் பல துன்பங்களுக்கு ஆளாக நேரிடும். இதனை தடுக்கவே விளக்கேற்றி வைக்கப்படுகிறது. இந்த விளக்கு தெற்கு திசை நோக்கி ஏற்றிவைக்கப்பட வேண்டும், ஏனெனில் இதுதான் மரணத்தின் கடவுளான எமனுக்கான திசையாகும். விளக்கேற்றி வைத்தபின்எமதர்மரிடம் அந்த அலைகள் தன்னை நெருங்காமல் விளக்கின் தீபத்திற்கு செல்லும்படி வேண்டிகொள்ள வேண்டும்.

### ஒரு திரி:

ஒருவர் இறந்த பிறகு பஞ்ச பூதங்களால்




நிறைந்த அவரின் உடலானது உயிரற்றதாகிவிடும். அதன்பின் ஒரே ஆன்மா மட்டுமே ஒளிரும். விளக்குகளில் பயன்படுத்தப்படும் ஒற்றை திரியானது ஒளிரும் ஆன்மாவை குறிக்கும்.

## பகலில் மட்டுமே இறுதி சடங்குகள் செய்யப்படுகிறது?

அனைத்து இறுதி சடங்குகளும் பகல் நேரத்தில் மட்டுமே செய்ய வேண்டும், ஏனெனில் உடலை தகனம் செய்வது முதன்மையானதாகும். இரவு என்பது எதிர்மறை சக்திகள் அதிகம் உலவும் மேலும் அவற்றின் பலமும் இரவு நேரங்களில் அதிகம் இருக்கும். இறந்த எதிர்மறை சக்திகள் எப்பொழுதும் மற்ற உடல்களில் நுழைய முயலும்.

எதிர்மறை சக்திகளின் இந்த தாக்குதல்களை தவிர்க்கவே உடல் பகல் பொழுதில் தகனம் செய்யப்படுகிறது.

அறிவியல் ரீதியாக கூறும்போது இறந்தவர்களின் உடலில் இருந்து வெளிப்படும் நுண்ணுயிர்களின் அளவு அதிகமாக இருக்கும். இது சுற்றி இருப்பவர்களுக்கு எளிதில் தாக்கக்கூடும். அதனால்தான் உடல் தகனம் பகலில் செய்யப்படுகிறது.

## மூங்கில் பாடை:

மூங்கில்களில் குறிப்பிட்ட ஒலி ஆற்றலை வெளியிடும் தன்மை உள்ளது, இது சுற்றி வரும் தன்மையுடையது. இதில் இருந்து வெளிப்படும் ஒலி ஆற்றல் இறந்த உடலுக்கு கவசமாக அலைகளை ஏற்படுத்தக்கூடும். மூங்கிலால் செய்யப்பட்ட பாடையில் இருக்கும் போது அந்த உடல் ஒலி ஆற்றலால் எதிர்மறை சக்திகளிடம் இருந்து பாதுகாக்கப்படும்.

## கால்கள் சேர்த்து கட்டப்படுவது:

இறந்தவர்களின் உடல் தகனம் செய்யப்படுவதற்கு முன்பு அவர்கள் உடல் தரையில் வைக்கப்பட்டு அந்த உடலின் காலின் பெருவிரல் இரண்டும் சேர்த்து கட்டப்படும். இது உடலின் வலது மற்றும் இடதுபுற ஆற்றல்கள் இரண்டையும் ஒன்று சேர்த்து உடலையே சுற்றி வர காலின் விரல்கள் கட்டப்படுகிறது.

## மண்பானை:

இறந்த உடலை சுற்றி இருக்கும் ஆற்றலை ஒருமுகப்படுத்த பல பொருட்கள் பயன்படுத்தப் படுகிறது, அதில் ஒன்றுதான் மண்பானை. மண்ணால் செய்யப்பட்ட பொருட்கள் இந்த வேலையை சிறப்பாக செய்கிறது.

உடலை எதிர்மறை சக்திகளின் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்க மண்பானை உதவுகிறது. மண்பானையிலிருந்து வெளிப்படும் ஒலி ஆற்றல்கள் மிகவும் வேகமாக பரவக்கூடியவை.

இறப்புக்குப் பின் ஒரு உடலை பாதுகாப்பாகவும், மற்றவர்களுக்கு பாதிப்பில்லாமலும் அப்புறப்படுத்த நமது முன்னோர்கள் கடைபிடித்த வழிமுறைகளின் தொகுப்புதான் சடங்கு, ஆனால் இன்று அந்த சடங்கு என்பது எதற்காக செய்கிறோம் என்றே தெரியாமல், ஏனோ தானோ என்று செய்வது வருத்தமாக இருந்தாலும், இதுபோன்ற பல்வேறு நிகழ்வுகளுக்கு கடைபிடிக்கும் சடங்குகளைப் நமது சந்ததியினருக்கு சொல்லிவைத்தால் பின் வரும் சந்ததியினருக்கு பயன்படும்.



# தனிமனித சுதந்திரத்தை கட்டுப்படுத்துவது
# மன்னிக்க முடியாத பாபமாகும்

கடவுளை சந்தேகப்படவே முடியாது. சண்டித் தனமாய் கடவுளை சந்தேகிக்கின்றவன் தனது முன்னேற்றத்தைத் தடுத்துக் கொள்ளுகின்றான்.

❖❖❖

இருட்டில் நடக்கின்ற ஒருவனுக்கு பாதையிலே காலில் இடறுகின்ற கயிறு அவனுடைய மூளைக்கு பாம்பாகத் தெரியும். இதுதான் சந்தேகம் என்பது. ஆராய்ந்த பின் இது விலகும்.

❖❖❖

உனது மூளைக்கு அல்லது மனிதனுடைய மூளைக்கு இரண்டு தவறுகள் அடிக்கடி ஏற்படும். அதிலே ஒன்று தெரிந்து சந்தேகப்படுவது. மற்றொன்று தெரியாமலேயே சந்தேகப்படுவது.

❖❖❖

மேற்சொன்ன தவற்றில் தெரியாமல் செய்கின்ற சந்தே கமே சற்று பொறுத்துக் கொள்ளக் கூடியதே. நீ இக்கருத்தை மனிதர் களுக்கு உபதேசிக்க வேண்டும். தெரிந்து சந்தேகப்பட முடியாது. மூர்க்கத்தனமாய் ஒருவரை சந்தேகப்பட்டால் அது உன்னுடைய மூளைக்கோளாறே.

❖❖❖

வியாதியை சந்தேகிப்பது என்பது மருத்துவர்களுக்கு ஒரு பெரிய கைம்மாறு செய்ய முடியாத உதவி. அதன்பிறகே அவர்களின் உடற்கூறுகளின் தாக்கங்களையும் வியாதிகளையும் ஆராய்கிறார்கள்.

❖❖❖

நீ கல்வி கற்கும்பொழுது உன்னுடைய முயற்சியில் உன்னை வெற்றி கொள்ளும் சோம்பலை, அது உன்னுடைய தவறு என்று ஏன் சந்தேகிக்க கூடாது? இதை நீ செய்யாமல் பிறரை சந்தேகிக்கலாமா? கூடாது. சிறுபாலர் என்ற சிற்சில



மனிதர்கள் தெய்வீகத்தில் உள்ளவர்களையும், அருளாளர்களையும் ஆராயாமல் சந்தேகிக்கிறார்கள். இது கூடாது. உன்னை நீயே சோதித்துக் கொள். உன்னையே நான் கல்விமான் என்பேன்.

❖❖❖

நல்ல தன்மைகள் நல்ல செய்கைகளை வெளிப்படுத்தும், சில சமயம் உனது நல்ல செய்கைகளுக்கு காலந்தாழ்த்தி வாழ்த்துக்கள் கிடைக்கும். எதிர்பாராத தீமைகளும் உனது நல்ல செய்கைகளால் தோன்றிவிடும். தீமைகள் எந்த இடத்தில் தோன்றுகின்றன தெரியுமா? நீ எந்த இடத்திலெல்லாம் மனதால் தாமதித்து சற்று சலனத்துடன் வேலை செய்திருக்கிறாயோ அங்கெல்லாம் இயற்கை உன்னை சந்தேகத்திருக்கும். அதுவே தவறுகளுக்கு காரணம்.

❖❖❖

வெளிப்படையான மனிதனே ஒரு நேர்மையான மனிதன். நான் ஒரு திறந்த புத்தகம் என்று சொல்ல வேண்டும்; மூடிய புத்தகமாக மனிதன் இருக்க கூடாது.

❖❖❖

மேலும் நேர்மையான மனிதனே தவறு செய்யாத மனிதன். தவறு செய்யாதே.

❖❖❖

நேர்மையான மனிதனிடம் மனக்கலக்கங்கள் இருக்காது. மனக்கலக்கத்திற்கு குழப்பமே காரணம்.

❖❖❖

நேர்மைக்கு உதாரணம் தன்மை மாறாதிருத்தல். நீ இத்தகைய மனிதனா? எந்த ஊரில் இருந்து ஒரு வெல்லக்கட்டியை எடுத்தாலும் அது எவ்விடத்திலும் இனிக்கவே செய்யும். இதுவே தன்மை.

❖❖❖

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**


ஒரு பொருளை நூறு சதவிகிதம் தன்மை ஆக்குவதற்கு ஒவ்வொரு சதவிகிதமும் ஒரே தன்மையைக் கொள்ளுகிறது. இதற்கே தன்மை நேர்மை என்று பெயர். மனிதன் இத்தகு நிலையை அடைந்தால் அதிகத் தன்மைகளை பெறலாம்.

❖❖❖

அப்பு அழுக்கு அற்ற தர்மம் என்பது உள்நோக்கமில்லாமல் செய்கின்ற தர்மமே. இந்தநிலை கடவுளை உணரும் தன்மையைக் கொண்டிருக்கிறது.

❖❖❖

உலகத்தன்மை அல்லது லோகாயதனம் என்றால் என்ன? ஒரு குறிப்பிட்ட உள் உணர்ச்சியில் நூல்கண்டைப் போன்று ஆயிரக் கணக்கான உள்எண்ணங்கள் சேர்ந்திருக்கும். அவைகளில் ஆயிரம் எண்ணங்கள் குடிகொண்டிருக்கும். இத்தகைய மனிதர் களுக்கும் உலகத்திற்கும் 'லோகாய தனர்கள்' என்று பெயர். அல்லது உலகத்தன்மை உள்ளவர்கள் என்று பொருள்.

❖❖❖

உன்னுடைய உள் உணர்வும் எண்ணமும் ஆசையாக இருக்கலாம். அதிலே உள்நோக்கம் என்ற ஆசையைத் திணிக்காதே. இப்படி திணித்தால் இவ்வுணர்வுக்கே லோகாயதனம் என்று பெயர். இதுவே சிலரின் தன்மையாக அமைந்து விடும்.

❖❖❖

உலகத்தன்மை என்ற வாழ்க்கையில் ஆயிரம் பொறுப்புகளும் பல நன்மைகளும் இருக்கின்றன. இத்தகைய நினைவு நல்லவிதமான உலகத்தன்மையாகும். இது உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனையும் சென்றடைய வேண்டும். சில தெளிவுள்ள மனிதர்களின் எண்ணம் இவ்வண்ணம் கூட இருக்கலாம்.

❖❖❖

முற்றிலும் புனிதமான முழுத்தன்மை என்பது கடவுள் ஒருவனை உணருவதே.

❖❖❖

அதி அற்புதமான தனிப்பட்ட நிலை என்பது கணக்குகளுடன் எழுதுகின்ற ஒரு வரைபடமல்ல. சுத்தமாக சொல்லப்போனால் இதன் பெயரே ஓவியக்கலை. இது மற்ற வரைபடக் கலைகளைக் காட்டிலும் முழுமையாக வேறுபட்டது.

❖❖❖

கலைகள் பல உண்டு. கலை என்பது ஒரு மனிதனின் உயிர் வெளிப்படுத்துகின்ற திறமை ஆகும். அதனால் அதன் பெயர் உயிர் ஓவியம் என்றாயிற்று.

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028







# குதிரை முகத்துடன் நந்தி பகவான்

இந்தியாவில் புகழ்பெற்ற சிவதலங்கள் அனைத்திலும் நந்தியம் பெருமான் சிவசன்னதி முன் காணப்படும். நந்தியின் உத்தரவு வாங்கிய பின் தான் சிவலிங்கத்தை தரிசிக்க முடியும்.

பிரதோஷ காலவழிபாடு நந்திக்கும் மட்டும் நடைபெறும்.

பிரதோஷ காலத்தில் நடைபெறும் வழிபாட்டில் பக்தர்கள் நந்தியின் முன் வேண்டும் பலன் கிடைத்துவிடும்.

ஆனால் தமிழகத்தில் தென்மாவட்டமான திரு நெல்வேலி தூத்துக்குடி நான்கு வழிசாலையில் சுமார் 14 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள முறப்ப நாடு என்ற ஊரில் உள்ள ஸ்ரீகைலாசநாதர் கோவிலில் உள்ள நந்தியின் முகம் குதிரை





முகத்தில் காட்சி தருவது அதிசயமாகும்.

மேலும், காசியில் கங்கை எப்படி வடக்கு தெற்காக பாய்கிறதோ அதேபோல் இங்கு வற்றாத ஜீவநதியாக தமிரபரணி பாய்கிறது.

நதிக்கரையில் நவகைலாயத்தில் ஐந்தாவது தலமாக ஸ்ரீகைலாசநாதர் கோவில் உள்ளது.

இங்குள்ள கைலாச நாதர் குரு அம்சமாக இருப்பதால் சுவாமிக்கு மஞ்சள் வஸ்திரம் சாத்தி கொண்டைக்கடலை நைவேத்தியம் செய்யப்படுகிறது. இந்த தலத்தின் சிறப்பே இது வியாழன் தலம் என்பது ஆகும்.

குருப் பெயர்ச்சி விழாவே இந்த கோவிலின் தலையாய சிறப்பு மிக்க விழாவாகும். ஏனெ னில் தென் தமிழகத்தின் பெரும்பான்மை ஊர்களி லிருந்தும் இந்த கோவிலுக்கு குரு பெயர்ச்சிக்காக வந்து வழிபடு கிறார்கள்.


அழகுராஜா

சூரபதுமன் அசுரனின் வழி யில் வந்த அசுரன் ஒருவன் முனிவர் களுக்கு செய்த தொல்லையை பொறுக்க முடியாமல் அவர்கள் முறைப்படி நின்று முறையிட்டார்கள். சிவபெருமான் திருவுளம் இரங்கி அவர்களுக்கு அருள் செய்தார். முறைப்படு நாடு முறப்பநாடு எனப் பெயர் பெற்றது என்பது வரலாறாகும்.

மற்ற கோவில்களில் உள்ள நந்தியம் பெருமானைப் போன்றே இக்கோவிலிலும் நந்தியம்பெருமான் இருந்ததாகவும், பிற்காலத் தில்தான் நந்தியின் முகம் குதிரை முகமாக மாறியதாகவும் புராணங்களில் கூறப்பட்டுள்ளது. குதிரை முக நந்தியின் நிகழ்வு எவ்வாறு ஏற்பட்டது என்பதை பார்ப்போம்.

சோழநாட்டை சேர்ந்த மன்னருக்கு பிறந்த பெண்குழந்தை குதிரை முகத்துடன் பிறந்ததால் மிகவும் வேதனை அடைந்தார்.

சிவபக்தரான சோழமன்னன் மற்றும் அவரது மனைவியும் பல புனித நதிகளில் நீராடி வற்றாத ஜீவநதியாக உள்ள தாமிரபரணி நதிகரையில் நீராடி கைலாசநாதர் முன்பு உள்ள நந்தி பகாவா னிடமும் மனம் உறுகி வேண்டினர்.

குதிரைமுக பெண்குழந்தையை கையில் ஏந்தி வருந்தி கைலாச நாதரை வழிபட்டனர். பின் நாடு திரும்பியதும் சோழமன்னரின்பெண் குழந்தை குதிரை முகம் மறைந்து அழகான பெண் முகமாகமாறியது. அரசகுடும்பத்தினர்.மிகவும்மகிழ்ச்சி அடைந்து பொதுமக்களுக்கு தானம் தர்மங்களை வழங்கினர்.

இந்நிலையில் மன்னர் மகள் அழகாக மாறிய போது தாமிரபரணி நதிகரையில் உள்ள கைலாசநாதர் முன்பு உள்ள நந்தி குதிரை முகமாக







மாறிய தகவல் சோழமன்னனுக்கு கிடைத்து குடும்பத்தினர் அனைவரும் கைலாசநாதரையும் குதிரைமுக நந்தியையும் மனதாரவழிபட்டு கோவில் திருப்பணிகளை செய்து உள்ளதாக கூறப்படுகிறது.

கோவில் ஸ்தலமரமாக அரசமரம் கோவில் முன்பு உள்ளது. குருஸ்தலமாகவும் நவகைலாய மாக உள்ளது. கோவிலில் குதிரை முகநந்திமுன்பு மனம்முறுகி வேண்டியவர்களுக்கு, தங்கள் வேண்டுதல் நிறைவேறியதாக பக்தர்கள் தெரி விக்கின்றனர்.

இரட்டை பைரவர் இங்கு மட்டுமே உள்ளது. சனி பகவான் தனிசன்னதியும் உள்ளது. இங்கு கணபதி மகாகணபதியாக பிரம்மா விஷ்ணு சிவபெருமாணாக கருதபட்டு கன்னி மூலையில் மூன்று கணபதியாக தனிசன்னதியில் காட்சி தருகிறார்.

அம்மன்சிவகாமி தேவியாக பக்தர்கள் வழிபட்டு வருகின்றனர். கோவில் முன்பு தாமிரபரணி ஆற்றில் ஏராளமான பக்தர்கள் புனித நீராடி வழிபட்டு தங்கள் வேண்டுதல்களை குதிரை முகநந்தியிடம் வேண்டி பலன் அடைகின்றனர். இங்கு பிரதோஷம், அஷ்டமி பைரவர் பூஜை சிவராத்திரி பூஜைகள் நடைபெறுகிறது.

காலை 6மணி முதல் 12மணி வரையிலும் மாலை 4 மணி முதல் 7மணி வரை நடைதிறந்து



இருக்கிறது. தமிழகத்தில் இருந்து ஏராளமான பக்தர்கள் சிவதொண்டு செய்துவருகின்றனர். காசியைபோல் நதியில் நீராடி வழிபாடு செய்யும் புன்னியஸ்தலமாக முறப்பநாடு ஸ்ரீகைலாசநாதர் கோவில் உள்ளது.

பிறசிவாலயங்களில் இல்லாத நந்தி குதிரை முகமாக தனிசன்னதியில் இருப்பதைகான ஏராளமான பெண்கள் குழந்தைகள் வந்து வழிபட்டு செல்கின்றனர்.

திருநெல்வேலியில் இருந்து தூத்துக்குடி செல்லும் அனைத்து பேருந்துகளும் முறப்பநாடு பகுதியில் நின்று செல்கிறது.–

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182



# நிர்ஜலா ஏகாதசி விரதம்

## வாழும்போது

### தனம், தானியம், ஐஸ்வர்யம் கொடுக்கும்

## வாழ்ந்தபின்

### விஷ்ணு லோகம் அழைத்து செல்லும்

கலியுகத்தில், அனைவரும் வேத சாஸ்திர நெறிமுறைகளையும், பூஜா விதிகளையும் முறையாகக் கடைப்பிடித்து, நரகத்தைத் தவிர்த்து, சொர்க்கத்திற்குச் செல்லும் வாய்ப்பு மிகவும் குறைவு.

அதற்கு எளிய உபாயமாகத்தான் பிரதிமாதமும் வரும் சுக்ல பட்ச ஏகாதசி மற்றும் கிருஷ்ணபட்ச ஏகாதசி ஆக 24 ஏகாதசி விரதம் மானுடர்களுக்கு வரப்பிரசாதமாக வழங்கப்பட்டுள்ளது.

பஞ்சபாண்டவர்களில் பீமசேனன் தவிர குந்திதேவி, யுதிஷ்டிரர், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் ஆகியோர் மற்றும் பாஞ்சாலி இவர்கள் அனைவரும் அனைத்து 24 ஏகாதசி விரதத்தையும் முறையாகக் கடைபிடித்துபகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை மகிழ்வித்து அவரது ஆசிர்வாதத்திற்கு உரியவர்களாக இருந்தனர்.

வாயுதேவரின் புத்திரனான 'சமானப்ராணா' (எந்தப் பொருளையும் செரிமானம் செய்யக்கூடிய வாயு) பீமனின் வயிற்றில் உள்ளதால், மற்ற அனைவரையும் விட 100 மடங்கு அதிகம் சாப்பிட்டாலும் கூட, அவை உடனே செரிமானம் ஆகிவிடும். பீமனால் பசி தாங்க இயலாத நிலையில் அவரால் ஏகாதசி விரதம் இருக்க முடியவில்லை.

ஆகவே, பீமசேனன், தனது பாட்டனாரும், மிகச்சிறந்த ரிஷி முனிகளில் முதன்மையான வருமான ஸ்ரீ வியாசரிடம், ஏகாதசி விரதம் கடைபிடிக்காமல் இருந்து, முக்தி அடையும் யுக்தியை கூறுங்கள் என்று கேட்டான்.

பீமனைப்போன்று கலியுகத்திலும் பலர் எல்லா ஏகாதசி நாட்களிலும் விரதம் இருக்கும் வாய்ப்பு இல்லாமல் இருப்பார்கள் எனப்புரிந்துகொண்ட வியாசர் அவர்களுக்காகவும், பீமனுக்காகவும் மாற்று வாய்ப்பான நிர்ஜலா ஏகாதசி விரதம் பற்றி கூறினார்.

அதன்படி, சூரியன் ரிஷபத்தில் இருந்து மிதுனத்திற்கு பயணிக்கக்கூடிய (வைகாசி,

# 10.06.2022

## நிர்ஜலா ஏகாதசி



சுபகிருது வைகாசி 27 | ஜூன் வெள்ளி | வளர்பிறை 161/365

ஏகாதசி 50.19 (கா.2.00) சித்திரை 45.58 (கா.0.15) நிர்ஜலா ஏகாதசி. சித்த யோகம்.




ஆனி) ஜேஷ்ட மாதத்தில் சுக்ல பட்சத்தில் வரக்கூடிய நிர்ஜலா ஏகாதசி விரதத்தில் உண் ணாமலும், ஒரு துளி நீர் கூட அருந்தாம லும் இருந்து நிர்ஜலா ஏகாதசி ஏகாதசி விரதத்தை கடைபிடிக்க வேண்டும்'' என்றார்.

'நீர் கூட அருந்தாமல்' இந்த விரதம் கடை பிடிக்கப்படுவதால் இது நிர்ஜலா ஏகாதசி என கூறப்படுகிறது. பின்னர், துவாதசிஅன்று காலை குளித்த பின்னர் பகவான் விஷ்ணுவை பிரார்த்தனை செய்துவிட்டு, ஆச்சார்யர்கள் யாருக்கேனும் வஸ்திர தானம், குடை, செருப்பு, கைத்தடி, பணம் ஆகிய ஏதேனும் தானம் தர லாம்.

பின்னர், அவர்களுக்கு தண்ணீர் வழங்க வேண்டும்; உணவளிக்கவேண்டும். அதன் பின் னர், விரத நிறைவு செய்ய வேண்டும்'' என அருளினார்.

## நிர்ஜலா ஏகாதசி விரத பலன்கள்

நீர் கூட அருந்தாமல் மிகக்கடுமையாக இந்த விரதத்தை கடைபிடித்தால், அவர்களின் சகல பாவங்களும் நீங்கும்... புண்ணிய நதிகளில் நீராடிய பலனைப் பெறுவார்கள்... மேலும், பிரதி மாதம் சுக்ல பட்ச, கிருஷ்ணபட்ச ஏகாதசி விரதம் இருக்காமல் இருந்தாலும், வருடம் முழுவதும் 24 ஏகாதசி விரதமிருந்த பலன்களையும் பெறு வார்கள்.

www.aanmeegamalar.com

நிர்ஜலா ஏகாதசி விரதம் முன்னோர்களுக்கு ஸ்ரார்த்தம் செய்த பலனைத்தரும்.

நிர்ஜலா ஏகாதசி விரதத்தை கடைப் பிடித்தவர் களுக்கு, இம்மையில் தனம், தானியம், ஐஸ்வர் யம் கிடைக்கும்.

மறுமையில் விஷ்ணு லோகம் கிடைக்கும். அவர்களது இறப்பிற்குப் பின், அவர்களை அழைத்துச் செல்ல யமதூதர்கள் வரமாட்டார்கள். மாறாக விஷ்ணு தூதர்கள் வருவார்கள். அந்த ஆன்மா, விஷ்ணுவின் திருப்பாதத்தை அடையும்.

2022-ம்வருட நிர்ஜலா ஏகாதசி திதி ஜூன்-10, வைகாசி 27-ஆம் தேதி சூரிய உதயத்துக்கு முன்பு அதிகாலை 3.16 மணிக்கு ஆரம்பித்து அன்றைய நடுஇரவு 2.00 மணிக்கு முடிகிறது. அந்த நேரம் முழுவதும் உணவு-நீர் அருந்தாமல் உண்ணாவிரதம் இருக்க வேண்டும். அதன்பின்பு துவாதசி திதி ஆரம்பித்து, ஜூன்-11, வைகாசி 28-ஆம் தேதி பகல் முழு வதும் உள்ளது.

அன்று காலை குளித்த பின்னர் பகவான் விஷ்ணுவை பிரார்த்தனை செய்துவிட்டு, ஆச்சார் யர்கள் யாருக்கேனும் வஸ்திரதானம், குடை, செருப்பு, கைத்தடி, பணம் ஆகிய ஏதேனும் தானம் தரலாம். பின்னர், அவர்களுக்கு தண்ணீர் வழங்க வேண்டும்; உணவளிக்க வேண்டும். அதன் பின்னர், உண்ணாவிரதத்தை நிறைவு செய்ய வேண்டும்.

தவிர்க்க முடியாத சூழ்நிலையில் உள்ள முதியவர்களும், நோயாளிகளும் அவரவர் உடல் நிலைக்கு ஏற்ப ஒரு வேளையோ அல்லது இரு வேளையோ உண்ணாமல் இருக்கலாம்.

முடிந்தவர்கள், நாள் முழுவதும் பகவான் திருநாமங்களை ஜபித்துக் கொண்டிருப்பது மிகவும் சிறப்புவாய்ந்தது. பெருமாளை நினைத்து மனதார வேண்டிக்கொள்ளலாம்.

விரதம் இருக்க முடிந்தவர்களும், முடியாத வர்களும் இந்த விரத விபரத்தையும், பலனை யும் பிறருக்கு எடுத்துச் சொல்வதன் மூலம், 'கோ' தானம் செய்த புண்ணியம் கிடைக்கும் என்கிறது புராணம்!

# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க













## aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்









# கண்ணனுக்கு தெரியாத விநாயகர் பிரதிஷ்டை செய்த

# நெரூர் சதாசிவபிரும்மேந்திரர்

திருநாகேஸ்வரம் கோயிலுக்குள் நுழைந்ததும், கொடிமரத்துக்கு வலதுபுறம் உள்ளது ஸ்ரீ கணநாதர் சன்னிதி !

இந்தச் சன்னிதியின் உள்ளே விக்ரகம் ஏதும் இல்லை. வெறும் மண்டபம் மட்டுமே உள்ளது, தெய்வ விக்ரகம் இருக்க வேண்டிய இடம் வெற் றிடமாக உள்ளது.

இந்த வெற்றிடத்தில் பூக்கள் தூவி வழிபாடு மட்டும் நடைபெறுகிறது. விக்கிரகம் ஏதும் இல்லாத இடத்தில் வழிபாடு எதற்குஎன்று கேட்டால், அந்த வெற்றிடத்திற்கு ஒரு ரகசியம் உள்ளதாக வரலாறு கூறுகிறது.

இந்த கோவிலின் ராஜ கோபுரம் அருகில் பேய், பிசாசுகள் போன்ற தீய சக்திகள் அட்டகாசம் செய்து வந்தது, பக்தர்களைக் கோயிலுக்குள் நுழையவிடாமல் தடுத்தனவாம்.

மீறி கோயிலுக்குள் செல்ல முயற்சித்தவர்களை, ஏதோ ஒரு சக்தி பின்னுக்குத் தள்ளுவது போல் உணர்ந்தார்கள். ஒரு சிலர் கீழே விழுந்து அடிபட்டதும் உண்டாம்.

அந்த வேளையில், மகான் நெரூர் சதாசிவ பிரம்மேந்திரர் யாத்திரையாக இத்திருத்தலத் திற்கு வந்தார், அவரின் நிஷ்டையில் இத்திருக் கோவிலை தீய சக்திகள் பிடிக்கும் நோக்கில் செயல்பட்டுக் கொண்டிருந்ததை அறிந்து கொண்டார்.




இத்திருக்கோவிலில் நிகழும் தீய செயல்களைப் பற்றி, ஊர்மக்கள் மகானிடம் முறையிட்டனர்.

அவர்களை சமாதானம் செய்த நெரூர் ஸ்ரீ சதாசிவ பிரும்மேந்திரர், அங்குள்ள சூழ்நிலையை மாற்ற, சிவபூத கணங்களுக்குத் தலை



www.aanmeegamalar.com

வனாகத் திகழும் மகாகணபதியையும், ஒரு யந்திரத்தையும் சூட்சுமமாக இங்கு பிரதிஷ்டை செய்தாராம்.

இந்த விநாயகர் சிலை யார் கண்களுக்கும் தெரியாதாம். ஆனால் மிகுந்த சக்தி வாய்ந்த தாம். இதனால், அந்த தீய சக்திகளால் அந்தப் பகுதியிலேயே இருக்க முடிய வில்லை.

இத்தலத்தின் வாசலில் தோன்றிய அக்னி ஜுவாலை தீயசக்திகளை விரட்டியடித்தது.



திருநாகேஸ்வரம் கோயிலுக்குள் நுழைந்ததும், கொடிமரத்துக்கு வலதுபுறம் இன்றும் அந்த சன்னதி அப்படியே உள்ளது.

சிதம்பர ரகசியம் என்று சொல்லும்போது, இந்த திருநாகேஸ்வரம் கணநாதர் சன்னதியும் இன்றுவரை ரகசியமாகவே திகழ்கிறது. இந்த சன்னதி முகப்பில் கணநாதர் ரகசியம் என பெயர்ப் பலகை வைத்துள்ளனர்.

ராகுதோஷம் நீங்க திருநாகேஸ்வரம் செல்பவர்கள், இந்த கணநாத ரகசியம் அடங்கி உள்ள ஸ்ரீ 'கணநாதர் சன்னிதியையும் வணங்கி வாருங்கள். தீய சக்திகள் உங்களை அண்டாமல் குடும்பத்தையே காக்கும்.

இந்த சன்னதி முன் நின்று ஸ்ரீ கண நாதர் மூலமந்திரமான

**ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம்**
**கணபதயே வரவரத**
**சர்வ ஜனம்மே வசமானய**
**ஸ்வாகா!!!**

இம் மந்திரத்தை நாள் தோறும் துதி பாடுவோர்கு எந்த வித குறைகளும் இல்லாமல் என்றும் எப்போதும் இன்பகரமான வாழ்வு கிடைக்கும்.

www.aanmeegamalar.com

# உடலில் ஏற்படும் நோய்களும் எளிதாக தீர்க்கும் வழிமுறைகளும்

உடலின் எந்த ஒரு பாகத்தில் பாதிப்பு ஏற்பட்டாலும், கைவிரல்களுக்கு பயிற்சி அளித்தே சரி செய்யலாம்.

## கட்டை விரல்:

உங்கள் கட்டை விரலுக்கு அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்வதால், மன அழுத்தம் குறைய, மனநிலையை கட்டுப்படுத்த முடியும், நல்ல உறக்கம் பெறலாம். மேலும் இது உடற்சக்தியை மேம்படுத்தவும் உதவுகிறது.கட்டை விரலானது, மண்ணீரல் மற்றும் வயிறு பகுதியுடன் இணைப்புள்ளது ஆகும். இது வெள்ளை மற்றும் சிவப்பு இரத்த செல்களை ஊக்குவித்து செரிமானத்தை சீராக்குகிறது.

## ஆள்காட்டி விரல்:

உங்கள் பலவீனம் மற்றும் பயத்தை குறைக்க கூடியது ஆள்காட்டி விரல். மேலும், ஆள்காட்டி விரலுக்கு அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்வது உங்களிடம் இருக்கும் அடிமைத்தனத்தினை குறைக்கவல்லது. உங்கள் ஆள்காட்டி விரல் சிறுநீரகம் மற்றும் சிறுநீர்ப்பையுடன் இணைப்புக் கொண்டுள்ளது. சிறுநீரகத்தில் கற்கள் உண்டாகாமல் இருக்கவும், நீர்வறட்சி ஏற்படாமல் இருக்கவும் பயனளிக்கிறது.

## நடுவிரல்:

நடுவிரலுக்கு அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்வது உங்களது கோபத்தை குறைக்க உதவும். தலை பகுதியில் இரத்த ஓட்டத்தை சீராக்கி தலைவலி ஏற்படாமல் இருக்கவும் இது உதவுகிறது.

நடுவிரலானது,கல்லீரல் மற்றும் பித்தப்பையுடன் இணைப்புடையது.

இது இந்த பாகங்களின் வலிமையை மேம்படுத்துகிறது மற்றும் உடற்சக்தியை ஊக்குவிக்கிறது.

## மோதிரவிரல்:

ஏறத்தாழ கட்டைவிரலுடன் ஒத்துப் போவது தான் இந்த மோதிர விரலும். உங்களில் இருக்கும் எதிர்மறை எண்ணங்கள் மற்றும் தீய எண்ணத்தை குறைக்க நீங்கள் மோதிர விரலுக்கு அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்யலாம்.மேலும், மோதிர விரல் நுரையீரலுடன் இணைப்பு கொண்டுள்ளது. இது சுவாசக் கோளாறுகளை போக்கவல்லது. மேலும், நரம்பு மண்டலம், தசைகளுக்கு வலிமை அளிக்கிறது. இதனால், உங்கள் உடற்சக்தி மேம்படும்.

## சிறுவிரல்:

சிறுவிரலுக்கு அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்வது இதயம் மற்றும் இரத்த ஓட்டத்திற்கு நல்லது. இது இரத்த ஓட்டத்தை சீராக்கி இதர உடல் பாகங்களின் செயற்திறனை ஊக்குவிக்கிறது.மேலும் இது மூளையின் செயல்திறனையும் மேம்படுத்துகிறது, இதனால் உங்கள் எண்ணம், சிந்தனை, கவனம் போன்றவையும் மேம்படும்.

## உள்ளங்கை:

மன அழுத்தம் தான் அனைவருக்கும்ஏற்படும் கொடிய நோய். இது ஒட்டுமொத்தமாக மனதையும், உடலையும் பாதிக்கக் கூடியது.

உள்ளங்கையில் அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்வது நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்க உதவுகிறது.இது உடல் மற்றும் மனதில் ஏற்படும் சோர்வில் இருந்து விரைவாக விடுபட்டு வெளிவரவும் பயனளிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.









பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதாசமையல்**
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# ஆன்மீக வழியில் அமைதி

ஆழ்ந்த உறக்க நிலை அனைவருக்கும் வரும் என்று கூற முடியாது. எடுத்துக்காட்டாக ஒருவன் உலகில் பொருள் சேர்ப்பதிலேயே அல்லும் பகலும் அவனது மனம் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். அவனுக்கு எப்படி ஆழ்ந்த உறக்க நிலை கிடைக்கும். தூக்கத்தில் கூட பொருளுக்காக அவன் மனம் அலைந்து கொண்டுதான் இருக்கும். ஆழ்ந்த உறக்கநிலை வருவதற்கு ஆன்மீக பயிற்சியில் மனம் ஈடுபட வேண்டும். நமது மனம் பக்குவ நிலைக்கு வர வேண்டும். நமக்கு மனம் பக்குவ நிலைக்கு வரும்போது ஆழ்ந்த உறக்க நிலையில் இருக்கலாம். ஆழ்ந்த உறக்க நிலையை ஆன்மா அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சத்சித்தியானந்தம் என்பதே ஆத்மா. சத் என்றால் நித்தியம், சித் என்றால் அறிவு, ஆனந்தம் என்பது நிறைவு ஆகும்.



நமது பிராணன் அறிவு மற்றும் ஐம்பொறிகளுடன் சேர்ந்துகொண்டு அன்னமய பிராணமய மனோன்மயகோசங்களின் கூட்டு சேர்ந்து கொள்ளும். அவ்வாறு சேர்ந்துகொண்டு அகக்கருவிகளான மனம் போன்ற அந்தக்கரணங்கள் என்ற மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இவைகளின் விருத்திகள் ஏற்படும். அவ்வாறு விருத்திகள் ஏற்படும்போது அது விஞ்ஞானமய கோசமாகிறது. அதாவது விஞ்ஞானமய கோசம் என்ற நமது அறிவுடம்பாகிறது என்று ஞானிகள் கூறியுள்ளனர்.

நமது ஐம்புலன்களில் ஒன்றான கண்களின் செயல்பாடுகள் மிகவும் முக்கியமானது. அதன் தன்மை மிகவும் ஆழமானது மிகவும் வேகமானது. விருத்திகளை அதிகமாக உடையது. உலகில் காணும் ஒரு காட்சியை ஐம்புலன்களில் ஒன்றான கண்கள் பார்த்தவுடன் காமிராபோல் அவைகள் படம் பிடித்து விடுகின்றது. அதனால் அவைகள் நமது நினைவுகளில் ஆழமாகப் பதிந்து விடுகிறது. இதனை கட்புலன் என்றும் கூறுவார்கள்.

மனிதனுடைய மற்ற புலன்களான மெய், வாய், செவி மூக்கு போன்றவைகளை விட இந்தக் கண்களால் அதிக விஷயங்களை கிரகித்துக் கொள்ளகூடிய தன்மை உடையது. ஒரு காட்சியைப் பற்றி கேட்டு அறிவதை விட, கண்களால் பார்த்து மகிழ்வது எவ்வளவு அழகானது. ஆனால் உலகில் காணும் பொருள்களைப் பற்றி கற்றலை விட கேட்டாலே மிகவும் சிறந்தது என்பர். அதைவிட கற்றலை கேட்டலை விட ஆன்மீக வழியில் பார்த்தலே மிகவும் சிறந்தது ஆகும். உலகில் காணும் எல்லாவித காட்சிகளையும், சம்பவங்களையும் இறைவன்தோற்றம், அழகிய இயற்கை காட்சி இவற்றையெல்லாம் ஐம்புலன்களின் ஒன்றான நமது கண்களின் வழியாகக் கண்டு படம் பிடித்து பதிவு செய்து நமது மூளைக்கு அவற்றை நன்கு உணர்த்தி விடுகிறது.

அவைகளை மனம் தனக்குள் ஆழமாக பதிந்து வைத்து விடுகிறது. மனிதனுக்கு புறக்கண்கள் போன்று அகக்கண்ணும் உண்டு. அகக்கண் என்பது ஏற்கனவே உலகில் நமது புறக்கண்களால் பார்க்கப்பட்ட காட்சிகளை மூளையின் மூலம் அவைகளை நினைவுபடுத்தி நம்மை ரசிக்கவும், நினைக்கும்படியும் வைக்கிறது.

42

எடுத்துக்காட்டாக நாம் அதிகாலையில் கோவிலுக்குச் சென்று தீபாராதனை பார்க்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். ஏற்கனவே காலையில் கோவிலில் நாம் பார்த்திருந்த

ஆன்மிகமலர்
www.aanmeegamalar.com



அந்த தீபாராதனைக் காட்சியை வீட்டிற்கு வந்த பிறகு அதனை நினைவுபடுத்தி பார்க்கலாம். அவ்வாறு பார்க்கும்போது நமது மனதில் தீபாரதனை காட்சியானது திரையில் காட்சி தோன்றுவதுபோல் நமக்குத் தோன்றுகிறது. அதனை நமது அகக்கண்கள் கொண்டு பார்த்து நம்மால் மகிழ்வதற்கு முடியும். நமக்குத் தேவைப்படும்போது ஐம்பொறிகள் மூலம் இந்த விஞ் ஞான உடல் கூட்டுச்சேர்ந்து கொண்டு இதர கோசங்களைப் பயன்படுத்தி செயல்படுகின்றது. எந்தவிதத்திலாவது ஒரு விஷயத்தை அறிந்து கொள்வதற்கு அது முனைப்புக் காட்டுகிறது. அது காட்சியாக இருந்தாலும், ஒலி வடிவாக இருந்தாலும், வாசனையாக இருந்தாலும் அதனை அறிந்து கொள்வதற்கு முயற்சி செய்கின்றது.

நம்மிடம் இருக்கும் ஆனந்தமய கோசம் என்ற இந்த இன்ப உடம்பு ஆகும். உலகில் உள்ள எட்டுத் திக்கிலும் மற்றும் மேல் கீழ் என எல்லா இடங்களிலும் ஒரு மகிழ்ச்சி ஆனந்தம் இருக்கின்றது என்று தெரியவந்தால் ஆனந்தமய கோசம் அதை அப்படியே தன்னிடம் ஈர்த்துக்கொள்கிறது. இந்த ஆனந்தமய கோசம் இந்த இடம்தான் என்று வரைமுறையில்லாமல் அனைத்து இடங்களிலும் உள்ள இன்பத்தின் வாசனையினை சிறிது

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

நுகர்ந்தால்கூட அதை ஆனந்தமய கோசம் அனுபவிக்கத் தொடங்கி விடுகிறது.

ஆனந்தமய கோசம் என்றால் என்ன என்பது பற்றி சிந்தித்துப் பார்த்தால், நமது நினைவுகளோடு கூடிய இன்பத்தைப் புரிந்து கொள்வது ஆகும். அவ்வாறு புரிந்துகொண்டு மற்ற புலன்களின் அடிப்படையில் எது ஒன்று குறைவாக இருந்தபோதிலும், அந்த மகிழ்ச்சியினை அந்தரங்கமாய் நாம் நினைவுக்கு கொண்டு வந்தால் போதுமானது. அந்த நினைவில் நாம் ஆனந்தம் அடைந்து விடுவோம். ஒரு ஆல விதைக்குள் ஒரு மிகப்பெரிய ஆலமரம் அடங்கியுள்ளதைபோன்று காலம், ஞானம், பரிமாண வளர்ச்சி போன்ற சுகத்திலே மூழ்கியிருப்பதே ஆனந்தமய கோசம் ஆகும். ஆனந்தம் என்று கூறியவுடன் ஆசையினால் வந்த ஆனந்தம் என்பது வேறு, பிரியத்தினால் வந்த ஆனந்தம் என்பது வேறு ஆகும்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

ஆசை என்று கூறியவுடன் அது நிறைவேறாத வரையில் அந்த எண்ணத்தின் அலைகள் சித்தம் என்ற ஆழ்மனதினை விட்டு நீங்காது. அதாவது நம்மை விட்டு எந்த நிலையிலும் நீங்காத நிலையில் நமது மனது அமைதி அடைய முடிவதில்லை. பிரியம் என்பது எண்ணங்களிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டது.

அவை ஆசையுடன் தொடர்பு கொள்ளாதது. இது உலகத்தின் இன்பத்தில் இருந்து விடுபட்டு ஞானத்துடன் தொடர்பு கொண்டதுதான் பிரியம் அல்லது விருப்பம். நம் கண்ணுக்குப் புலப்படாத உணரக்கூடிய இறைவன் மீது வைத்திருப்பதே உன்னதமான மேலான பிரியம் ஆகும். உலகில் உள்ள பொருளின் மீதோ அல்லது அதன் தொடர்பான விசயங்களில் அதனைக் கண்டவுடன் உண்டாவது ஆனந்தம். கண்டதை அனுபவத்துடன் உண்டாகும் ஆனந்தம் என்பது வேறு. அதனை பிரமானந்தம் என்று கூறுவர்.

நம் அனைவருக்கும் ஐந்து கோசங்கள் அடங்கிய உடல் உள்ளது. மனிதன் செய்கின்ற வினைகளின் பதிவு நமது சூட்சம உடலில் தங்கி விடுகிறது. அடுத்த பிறவியிலும் அவனை அவன் செய்த வினைகள் தொடர்கிறது. இந்தப் பிறவியிலே பக்குவ நிலைக்குச் செல்வதற்கு ஆன்மீக வழியில் தீவிர முயற்சி செய்தல் வேண்டும், அவ்வாறு முயற்சி செய்யும்போது சூட்சம உடலில் நமக்கு அனைத்து அவயங்களும் செயல்படும். இந்தப் பிறவியில் மனம் பக்குவ நிலைக்கு வரவேண்டு மானால் ஆன்மீகவழியில் நாம் செல்ல வேண்டும். அதாவது ஆன்மீக வழியில் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். ஆனால் நம்மைத் தவிர வேறு யாருக்கும் வெளியே தெரியாது.




ஆனந்தமய கோசத்துடன் பரமாத்மாவுடன் சேர்க்கை ஏற்படக் கூடிய நிலையினை ஆனந்தமய கோசம் கொண்டுள்ளது என்று ஞானிகள் தங்கள் அனுபவபூர்வமாக உணர்ந்து அதனைக் கூறியுள்ளனர்.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# நமது இதழ் வளர்ச்சிக்கு உதவ விருப்பமுள்ள வாசகர்கள், அன்பர்கள் விருப்ப சந்தா செலுத்தலாம்

## எங்கள் சேவைக்கு உங்கள் உதவி தேவை.

விருப்ப
**சந்தா**

சந்தா அனுப்புபவர்கள் UPI & வங்கி எண் வாயிலாகவும் சந்தா செலுத்தலாம்

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)